Registered as a news paper.


பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 07 (13.11.2002) புதன்கிழமை இதழ் : 44



Pc PARADISE

நியாயமான விலையில் தரமான கணனிகளையும் கணனி உதிரிப் பாகங்களையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

Pc Paradise

No. 61, Clock Tower Road, Jaffna.

TP No. 0777271220

# தலைவர் பிரபா மீதான தீர்ப்பு;

# நாடாளுமன்றில் அமளிதுமளி!

## ஒஸ்லோ மாநாட்டில் சுவீடனும் பங்கேற்கும்

(கொழும்பு)

ஒஸ்லோ நிதியுதவி மாநாட்டில் கலந்துகொள்ளச் சுவீடனும் சம்மதித்துள்ளது. அமைச்சர் மிலிந்த மொறகொட தற்போது சுவீடனில் தங்கியுள்ளார். அமைச்சரிடம் சுவீடன் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளது.

ஏற்கனவே இலங்கைக்கு உதவி வழங்கும் ஒஸ்லோ நிதியுதவி மாநாட்டில் கலந்துகொள்ள அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஜப்பான் ஆகிய நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்ச்சையைக் கிளப்பியது ஜே.வி.பி.; எதிர்த்த மகேஸ்வரன் வெளியேற்றம்

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மீது மேல்நீதிமன்றம் 200 வருட சிறைத்தண்டனை விதித்துள்ள நிலையில் புலிகளுடன் பேசுவது சட்டவிரோதமானதென - ஜே.வி.பி., நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த கவனஈர்ப்புத் தீர்மானத்தினால், நேற்றுச் சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.**

சபையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் - இரண்டு தடவைகள் சபையை சபாநாயகர் ஒத்திவைத்ததுடன், கவனஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்த ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் மகிந்த ரத்னதிலக ஆகியோர் சபையைவிட்டு வெளியேறுமாறு கேட்கப்பட்டனர்.

இது பற்றித் தெரியவருவதாவது:-

நேற்றுக்காலை சபை கூடியதும், ஏற்கனவே சபாநாயகரின் அனுமதியைப் பெற்றிருந்த குறிப்பிட்ட கவனஈர்ப்புத் தீர்மானத்தை, விமல் வீரவன்ச சபையில் வாசித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளில் இணைந்த ஐவர் பெற்றோரிடம் ஒப்படைப்பு!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில், இயக்கத்தில் சுயவிருப்பின் பேரில் இணைந்து கொண்ட பதினெட்டு வயதிற்குட்பட்ட ஐந்து சிறுவர்களைப் பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்வொன்று நேற்று மாலை 3.30 மணியளவில் நடைபெற்றது.

இப்பதினெட்டு வயதிற்குட்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)



பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள்.

## வீரவன்ஸ வெளியிட்ட தீர்மானம்; சபையின் சட்டத்திற்கு முரணானது!

### அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ச - நேற்றுக் கொண்டு வந்த கவனஈர்ப்புத் தீர்மானம், நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்துக்கு முரணானதென அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுப் நாடாளுமன்றத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக நமது ஈழநாட்டுக்கு அளித்த பேட்டியில், மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இது பற்றி மேலும் குறிப்பிடும்போது -

பாராளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டம் 31ன் ஆறாவது பிரிவில் - சட்ட நீதிமன்றம் ஒன்றில் தீர்ப்புக்கு உட்பட்டுள்ள அல்லது சட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை-கடற்புலி தளபதிகள் முகமாலையில் இன்று சந்திப்பு!

கடற்படை அதிகாரிகளுக்கும் கடற்புலி முக்கியஸ்தர்களுக்கு மிடையில் இன்று முகமாலையில் சந்திப்பொன்று இடம்பெறவிருக்கின்றது.

இந்தச் சந்திப்பில் கடல் வலயத் தடைகளை நீக்குதல் மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் போன்ற விடயங்கள் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்ட கண்காணிப்பு குழுத் தலைவர் புருண்டம் தலைமையில் இச்சந்திப்பு நிகழவிருக்கின்றது. கூட்ட நேரத்தில் யாழ்ப்பாணம்-வன்னி ஏ-9 பாதை மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படைப் பிரதிநிதிகளுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கவனஈர்ப்புத் தீர்மானம் பற்றி எதுவும் எமக்குத் தெரியாது

### கூட்டமைப்பு எம்.பி. துரைரட்ணசிங்கம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவா வே.பிரபாகரன் மீதான நீதிமன்றத் தீர்ப்பை வைத்து - ஜே.வி.பி. கவனஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரும் வரை, தமக்கு அதுபற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை என கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான துரைரட்ணசிங்கம் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.

தமக்கு இதுபற்றி சபாநாயகர் அறிவித்திருக்கவில்லையென்றும், ஜே.வி.பி. உறுப்பினருடன் (12 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அம்மையார் எப்ப என்ன பேசுவார் என்று அவவுக்குத்தான் தெரியும்...

## இருவழிப் பாதையாக ஏ-9 வீதி மாற்றப்படும்

யாழ்ப்பாணம்-கண்டி வீதியை இருவழிப் பாதையாக மாற்றி அமைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி வழங்குகின்றது.

ஏ-9 பாதையூடாக பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் செல்கின்றன. இதனால் இந்த வீதியை இரு வழிப் பாதையாக அபிவிருத்தி செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேசமயம், வீதி அபிவிருத்திக்கு தடையாகவுள்ள கிளிநொச்சி நகரக் கடைகள் அகற்றப்படவுள்ளன. இந்தக் கடை உரிமையாளர்களுக்கு வேறு இடங்களில் இடத்தை ஒதுக்கிக் கொடுப்பதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க இருக்கின்றது.

இந்த புதிய திட்டத்திற்கமைய யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் 60 கிலோமீற்றர் தூரமான பாதை இருவழிப் பாதையாக மாற்றப்படும்.



நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றுகிறார்

## அரசு-புலிகள் பேச்சுக்களை வரவேற்கிறாராம் ஜனாதிபதி!

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் நடாத்தி வரும் பேச்சுவார்த்தையை வரவேற்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

ஜனாதிபதியாகப் பதவி ஏற்று எட்டு வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு ஜனாதிபதி செயலகத்தில் விசேட வைபவம் ஒன்று நடைபெற்றது. அந்த வைபவத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்க வேண்டும். தவறான கொள்கை கொண்ட ஒருவர் இந்தப் பதவியில் அமர நேரிட்டால் நாட்டின் ஜனநாயகம், சுதந்திரம் பறிபோய்விடும். இந்த முறையை நீக்கிச் சுதந்திர (12 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!

விமான சேவை

(சி-148)

J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,

CMB 505632 - 390128 - 517019

## வாழ்க வளமுடன்

### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

அகவை ஒன்பதில்..



பெயர் : கே.சுதாகரன்
முகவரி : 17, விதானையார் வீதி, கொழும்புத்துறை மேற்கு.

அகவை மூன்றில்..



பெயர் : ர.பகீரதன்
முகவரி : வட்டு.கிழக்கு சித்தங்கேணி

அகவை இரண்டில்..



பெயர் : வி. வினோபா
முகவரி : கரந்தன், நீர்வேலி.

அகவை ஒன்றில்..



பெயர் : ச.பிரவீனா
முகவரி : மூளாய் கிழக்கு, சுழிபுரம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## இன்றைய நாள் இனிய நாள்

**13-11-2002 - புதன்கிழமை**

**மேடம்** :- மகிழ்ச்சி, நோய் நீக்கம், புத்திவிருத்தி, பணவரவு, பெண்கள் சுகக்குறைவு, வயிற்றில் சிறிது சுகயீனம், நண்பர்கள் வரவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் மத்திமம்.

**இடபம்** :- மகிழ்ச்சி , தெய்வதரிசனம், பிதாவுடன் மகிழ்ச்சி, எடுத்த காரியம் வெற்றி, பொதுசேவையில் கௌரவம், வெளியூர் பயணம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் மத்திமம்.

**மிதுனம்** :- மகிழ்ச்சி, பணவரவு, பிதா தேகசுகம் நன்று, தெய்வ தரிசனம், விருந்தினர் வரவு, சமய அறிஞர் உறவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- தேகசுகக்குறைவு, காரியத் தடை, வீண்பழி கேட்டல், எதிரியால் தொல்லை, கல்வியில் முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**சிங்கம்** :- மனமகிழ்ச்சி, சுப காரியங்களில் பங்கு, விதம்விதமான ஆடை அணிவதில் மகிழ்ச்சி, கௌரவம், பெண்களால் மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும். வியாபாரம் முன்னேற்றம்.

**கன்னி** :- தேசுகம் நன்று, பணவரவு, புதிய கடன் வசதி, எடுத்த காரியம் வெற்றி, எதிரியின் ஆணவ வலு குன்றுதல், கல்வி முன்னேற்றம், வியாபாரநிலை மத்திமம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்**
**அவர்களின் சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- தேசுகம் நன்று, புத்திரர் சுகம், புகழ், பொது சேவையில் மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- மனச்சஞ்சலம், மாதா சுகக்குறைவு, பெண்சுகக்குறைவு, வைத்தியச் செலவு, உறவினரால் செலவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம்.

**தனு** :- மனமகிழ்ச்சி, சகோதர உறவு, எடுத்த காரியம் வெற்றி, சுபகாரியங்களில் பங்கு, கல்வி முன்னேற்றம், வியாபாரநிலை மத்திமம்.

**மகரம்** :- மனச்சஞ்சலம், வரவுக்கு மிஞ்சிய செலவு,பெண்களினால் சண்டை, வாக்குவாதம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- தேகசுகக் குறைவு, கர்வத்தினால் செலவு, எடுத்த காரியம் தடை, அயலவர்களுடன் மௌனம் சாதிப்பது நன்று, மனச்சஞ்சலம், கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**மீனம்** :- மனதில் கர்வநிலை உருவாதல், வீண்செலவு, தேவையற்ற வாக்குவாதம், எடுத்த காரியம் தடை,கல்வி முன்னேற்றம், வியாபார. .முன்னேற்றம்.

# கல்வியியற் கல்லூரிகளில் அனுமதிக்கான இரண்டாம் கட்ட நேர்முகப் பரீட்சை

கல்வியியல் கல்லூரிகளில் இரண்டாவது கட்ட நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. நேற்று வெளியான இப் பட்டியலின் தொடர்ச்சி வருமாறு:

**சமூகக்கல்வி**

செபஸ்ரியம்பிள்ளை யெனிஸ் ஜெயந்தன் (யாழ்ப்பாணம்), தர்மதாசன் தனுசா (சண்டிலிப்பாய்), வித்தியா கந்தசாமி (மீசாலை), சிவசுப்பிரமணியம் சிவராஜி (சாவகச்சேரி)

**நாடகமும் அரங்கியலும்**

சிவகுரு நந்தகுமார் (மட்டக்களப்பு), காளிதாஸ் அன்ரனிற்றா (ஜெயந்திபுரம்), விசுவலிங்கம் இராஜகுமார் (குருக்கள் மடம்), இரத்தினம் சுகந்தினி (கரந்தன்), உசா உலகநாதன் (சுழிபுரம்), தட்சணாமூர்த்தி அனோஜா (நெடுந்தீவு), சந்திரசேகரம் நிரேஸ் (கல்வியங்காடு), கார்த்திகேசு அருட்கஜன் (தெல்லிப்பளை), வேதநாயகம் அமலநாயகி அக்னேசியா (மன்னார்), சத்தியபாமா சின்னத்தம்பி (கொடிகாமம்), இராமசந்திரன் பாமதி (மானிப்பாய்) மகேந்திரராசா புனிதா (கரவெட்டி) பாலசிங்கம் பிரதீபன் (சண்டிலிப்பாய்), சின்னத்துரை குலேந்திரன் (யாழ்ப்பாணம்), வில்வராஜா மதிவதனன் (புத்தூர்), வேலுப்பிள்ளை செந்தூரன் (மானிப்பாய்), எம்.வாசுகி (சங்குவேலி), இராஜதுரை இரனிதா (சண்டிலிப்பாய்), பசுபதி கம்சாரதி (அளவெட்டி), செல்வநாயகம் பிரதீபன்(மானிப்பாய்), சுப்பிரமணியம் சிவனுசா (தெல்லிப்பளை), சபாரத்தினம் சுகந்தினி (ஆரயம்பதி), இராதிகா மனோகரன் (யாழ்ப்பாணம்), கார்த்திகேசு சந்திரகலா (செங்கலடி), கௌசல்யா தங்கராஜா புத்தூர்,தெய்வேந்திரன் தேவதாரணி (இணுவில்), கந்தையா சிவகுமாரி (உருத்திபுரம்), நாகரட்ணம் ருக்மணி (பூநகரி),

**நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில்நுட்பமும்**

நவரட்ணராஜா விசாகை(வவுனியா), மாணிக்கம் முருகதாஸ் (முழங்காவில்), சிவசுப்பிரமணியம் சடாச்சரம் (வவுனியா), நடராஜா அரவிந்தன (பாண்டியங்குளம்),

**சைவசமயம்**

பொன்னுத்துரை உதயரஞ்சினி (வரணி), உஷா பொன்னம்பலம் (அளவெட்டி), யோகராஜா வேணுகோபன் (ஏழாலை), மாயா ரவீந்திரன் (யாழ்ப்பாணம்), இரத்தினம் ஜெகநாதன் (வல்வெட்டித்துறை), துரைசாமி தவரூபி (வல்வெட்டித்துறை), நாகநாதன் சிவதாசன் (முழங்காவில்), வராகனி பரமானந்தசிவம் (கண்டாவளை), சரவானந்தன் ஜனனி (காரைதீவு), சுனில் கருணபாலா சுதர்சினி (மல்வத்தை), சூசை நவீஸ்யூட் பெக்மன் (திருகோணமலை), பரராசர் ஜெயமதி(பாண்டிருப்பு), மதனராஜன் சத்தியன்(கல்முனை-1), நவரட்ணராஜா நாகநிரஞ்சுதன் (மன்னார்) கணேச ரட்ணம் மோகனா (மூதூர்), செல்வநாயகம் நந்தீஸ்வரன் (திருகோணமலை)

## களுத்துறை சமாதான விளையாட்டுக்கு யாழில் இருந்து 130 பேர்

(கொழும்புத்துறை)

களுத்துறை நகரசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள - வடக்கு கிழக்கை இணைக்கும் சமாதான விளையாட்டுக்களில் பங்குபற்றவுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 130 வீரர், வீராங்கனைகள் நாளை காலை 8.30ற்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து புறப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் வீரர்களுக்கு, யாழ்மாவட்ட விளையாட்டு அதிகாரி ஜே.றூபசிங்கம் தலைமை தாங்குவார். விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண மேற்கொண்டுள்ளார்.

(60)

## சாவகச்சேரி ச.ச.நிலையத்திற்கு 50 ஆயிரம் ரூபா

(சரசாலை)

யுத்த அனர்த்தங்களின் போது சேதமடைந்த சாவகச்சேரி உப்புக்கேணி சித்திவிநாயகர் சனசமூக நிலைய திருத்த வேலைகளுக்காக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் 50 ஆயிரம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளார்.

(34)


ஜோ.எகட்டனின் ஜெசித்தாராவின்
இன்றைய ஸ்பெசல்
4 - இன் - 1 - சிக்கன் புரியாணி
ரூபா 125
ஜெசித்தாரா
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டிக்குளி.
(சி-163)

நிறஞ்சனாஸ் சங்கானை


இன்று முதல்
விஜய், சந்தியா
நடித்த
காட்சி நேரம்
11.00, 2.45, 6.00
(சி-139)

ராஜா
யாழ்ப்பாணம்.

தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்:- 10.30, 2.30, 6.00, 9.30
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)


## யாழ்ப்பாணம் மாநகரசபை

### 2003ஆம் ஆண்டுக்கான வழங்குனர்களையும், ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள்/ உற்பத்தியாளர்கள்/ ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 29.11.2002ம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

### பொருட்கள்

01. காகிதாதிகள், எழுது பொருட்கள்.
02. அலுவலக உபகரணங்கள்.
03. மேல்நாட்டு மருந்து வகைகள், வைத்திய உபகரணங்கள்.
04. சித்த மருத்துவ மருந்துகள், மருந்துகள்.
05. கோலவுடைத் துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணி வகைகள்.
06. பாதணிகள், மழைக்கவசம், மற்றும் தோற் பொருட்கள்.
07. கட்டிடப் பொருட்கள் (சீமந்து, கூரைத்தகடு, ஓடுகள் முதலியன)
08. தீந்தைகள், நிறந்தீட்டும் பொருட்கள் முதலியன.
09. கற்கள், மணல்கள்.
10. நீர் வழங்கு பொருட்கள், பி.வி.சி குழாய்கள் முதலியன.
11. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள்.
12. மின்சார இயந்திர பொருட்கள், மின் கருவிகள்.
13. விறகு, தேங்காய் மட்டை, கிடுகுகள்.
14. எரிபொருள் உராய்வு நீக்கிகள், கிறீஸ்.
15. இரும்புப் பொருட்கள்.
16. பனை மரங்கள், சலாகைகள்.
17. நூலகங்களுக்குரிய நூல்கள்.
18. வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர், டியூப் முதலியன.
19. தீராந்திகள், றீப்பைகள், பலகைகள்.
20. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க் கடகம், கால் துடைப்பம், இழைக் கயிறு, தேடாக்கயிறு முதலியன.
21. சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமி நாசினிகளும், மருந்துகளும்.
22. கணினிகளுக்கான உதிரிப்பாகங்கள், போட்டோ பிரதி இயந்திரம், கனன், சாப் வகைகளுக்கான உதிரிப்பாகங்கள்.

### சேவைகள்

01. அச்சிடுதல்.
02. தட்டச்சு இயந்திரம் திருத்தம்.
03. மோட்டோர் வாகனம் திருத்தம்.
04. ரியூப் ஒட்டுதல்.
05. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்.
06. ஏற்றியிறக்கல் வேலைகளுக்கும், பாரம் குறைந்த வாகனங்களும் வாடகைக்கு விடுதல். (சுத்திகரிப்பு, வேலைப் பகுதி ஏற்றியிறக்கல் வேலைக்கு ரைக்டர் வாடகைக்கு விடல்)
07. கோலவுடை தைத்தல்.
08. மின் மோட்டார்கள் மின் விசிறிகள், ஜெனரேற்றர்கள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தம்.
09. ஏற்றியிறக்கல் தொடர்பாக மாட்டு வண்டியை சேவைக்கு அமர்த்துதல்.
10. மின்கலங்களுக்கு மின் வலுவூட்டல்.
11. இறப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல்.
12. வாகனங்கள் சேவிஸ் செய்தல்.
13. கணனி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம் திருத்தம், சேவிஸ் செய்தல்.

கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல்கள் சேவைகள் 2003ம் ஆண்டு" எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்க வேண்டும்.

வழங்கல்களுக்கும், தேவைகளுக்குமான விண்ணப்பங்கள் "ஆணையாளர்", மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல், சேவைகளுக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்கள் யாழ் மாநகரசபை கொள்வனவுப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக (ரூபா:250/- -வற் ரூபா:50/-) ரூபா:300/- பெறுமதியான காசுக்கட்டளை/ தபால் கட்டளையை 'ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' என்ற பெயருக்கு பெறப்பட்டு இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் சபையின் நானாவித இறைவரிக் கிளையில் நேரடியாக வேலைநாட்களில் செலுத்த முடியும்.

கூறு விலைகள் பதிவு செய்யப்பட்டவர்களிடம் இருந்து கோரப்படும்.

கோரப்படும் பொழுது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும், அல்லது உரிய நேரத்திற்குப் பொருட்கள்/சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள், சேவைகள் வழங்கும் எந்தவொரு வழங்குனரின் பெயரும் முன்னறிவித்தலின்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

இ.இராமலிங்கம்.
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
11.11.2002

(சி-177)

# ஐ.நா.சட்டங்களுக்கு அமைவாக புலிகள் தனியரசு நிறுவலாம்!

## தேவையான அனைத்தும் அவர்களிடம் உள்ளன என்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் தனியரசு ஒன்றை நிறுவுகின்ற அனைத்துத் தேவைப்பாடுகளையும் கொண்டிருப்பதாகவும், தற்போது அரசாங்கம் இதற்கான இறுதி ஏற்பாடுகளையே அவர்களுக்குச் செய்து கொடுப்பதாகவும் ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பு மாவட்டம் உள்ளடங்கலாக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஜே.வி.பி. ஆரம்பித்துள்ள பிரச்சார இயக்கத்தின் வெளியீடாக, நான்கு பக்கங்களிலான அறிக்கையொன்றை வீடு வீடாக விநியோகித்து வருகின்றது. இவ் அறிக்கையிலேயே அரசாங்கம், புலிகளைச் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கச் செய்யும் நடவடிக்கையில் இறங்கியிருப்பதாக கூறப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தனியரசு ஒன்றை நிறுவுவதற்கும் பிரிவினைக்குமான, தகுதிகள் ஐ.நாவின் 'மொன்ட விடயோ' சட்ட மூலத்தில் கூறப்பட்டுள்ளது. தனியான இராணுவ அமைப்பைக் கொண்டிருத்தல், தனியான நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டிருத்தல், தமக்கென ஒரு மக்கள் கூட்டத்தைக் கொண்டிருத்தல், சர்வதேசத் தொடர்புகளை ஏற்படுத்தியிருத்தல் மற்றும் தனியான தேச எல்லையை நிர்ணயம் செய்யக்கூடியதாக இருத்தல் என்பனவே 'மொன்ட விடயோ' சட்டத்தில் கூறப்பட்டுள்ள தனியரசுக்கான தேவைப்பாடுகளாகும்.

இவையனைத்தையுமே புலிகள் கொண்டிருக்கின்றனர். தேச எல்லை நிர்ணயத்தை மட்டுமே அவர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய கடைசிக் கட்டத்தில் இருக்கின்றனர். இதனைப் பூர்த்தி செய்யும் ஏற்பாடுகளையும் புலிகள் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், அரசாங்கம் சர்வதேச ரீதியில் புலிகளின் தனிநாட்டை அங்கீகரிக்கச் செய்யும் நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது. புலிகளுக்காக வட-கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தைக் கொடுக்கும் அரசாங்கம், முஸ்லிம்களுக்காக தனி அலகைக் கொடுத்தால் மலையகத்திலும் வேறு பகுதிகளிலும் தனி நிர்வாகக் கோரிக்கைகள் எழும்.

நோர்வே - பிரபாகரன் - ரணில் விக்கிரமசிங்க கூட்டுக்கு எதிராக அனைவரும் அணி திரண்டு தாயகத்தைக் காக்க முன் வரவேண்டும் என ஜே.வி.பியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (01)

## சின்னஞ்சிறு செய்திகள்

### அமெரிக்காவில் பயிற்சி

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிமரசிங்கவின் மெய்க்காவலர் குழு மேலதிக பயிற்சிக்காக அமெரிக்கா சென்றுள்ளது. இக் குழுவில் 150 பேர் அடங்குவதாக கூறப்படுகின்றது.

### காடழிப்பைக் கட்டுப்படுத்த கடுமையான சட்டங்கள்

காடழிப்பு சம்பந்தமாக, அரசாங்கம் கடுமையான சட்டங்களை இயற்றவுள்ளது என்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

1970ஆம் ஆண்டு 40 வீதமாக இருந்த காடுகள், இப்போது 22 வீதமாக உள்ளன. மலைநாட்டில் இருந்து களவாக மரங்கள் தறிக்கப்பட்டு வருகின்றன. இதனாலேயே அரசாங்கம் இச்சட்டங்களை கொண்டு வர இருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

### திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் இடமாற்றம்

(பன்னாலை)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் திட்டமிடல் உதவிப் பணிப்பாளராக கடமையாற்றிய க.சத்தியசீலன் மாவட்ட செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். (72)

### குப்பிளானில் பச்சை மரங்கள் தறிப்பு

(புன்னாலைக் கட்டுவன்)

படையினரால் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத குப்பிளான் வடக்கு, குரும்பசிட்டி மற்றும் கட்டுவன் பகுதிகளில் உள்ள பயன்தரு பச்சை மரங்கள் விறகு வியாபாரிகளால் தறிக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதிகளில் விறகு வெட்டச் செல்வோர்-முன்னர் மிதிவெடிகளில் சிக்கித் தம் அவயவங்களை இழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (83)

### 8 ஆவது தடவை உடைக்கப்பட்ட கோயில் உண்டியல்

(வண்ணார்பண்ணை)

கன்னாதிட்டி காளி கோயிலில் எட்டாவது தடவையாகவும் கோயில் உண்டியல்கள் உடைக்கப்பட்டு அவற்றிலிருந்த முழுப்பணமும் சூறையாடப்பட்டுள்ளது.

மணிக் கோபுரத்தின் வழியாக உள்நுழைந்தே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஒரே நேரத்தில் மூன்று உண்டியல்கள் உடைக்கப்பட்டு அதிலுள்ள பணம் அபகரிக்கப்பட்டதோடு-பெரிய உண்டியல் மிகவும் பாதுகாப்பாக இருந்ததால் அது உடைக்கப்படவில்லையென ஆலய அறங்காவலர் தெரிவிததுள்ளார். (59)

### அரியாலை சனசமூக நிலையத்துக்கு உதவி

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்காக கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரினால் - பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து, ஒதுக்கீடு செய்யப்பட்ட 50 ஆயிரம் ரூபா பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் மற்றும் தளபாடங்கள் ஆகியன சனசமூக நிலையத்திடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மேலும் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற மு.சிவசிதம்பரத்தின் நிதியிலிருந்தும் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா, பாலா பாடசாலை புனரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிதி யாழ்.மாநகர சபைக்கூடாக இவ்வருட இறுதிக்குள் வழங்கப்படவுள்ளது.

## கிழக்கில் புலிகளின் நிர்வாகம்; ஆட்சேபிக்கிறார் ரவூப் ஹக்கீம்!



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் தமது நிர்வாக கட்டமைப்பை வலுப்படுத்தி வருவது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஆட்சேபனை தெரிவித்துக் கடிதம் ஒன்றை பிரதமருக்கு அனுப்பி வைதத்துள்ளார்.

கிழக்கில் காவல்துறை அலுவலகங்களையும் நீதிமன்றங்களையும் புலிகள் திறந்து வருகின்றனர். இது கிழக்கிலுள்ள முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். அடுத்த கட்ட அரசு - புலிகள் சமாதானப் பேச்சு நிகழ்ச்சி நிரலில் இது தொடர்பாகப் பேச நேரம் ஒதுக்கும்படி ஹககீம், பிரதமர் ரணிலுக்கு அனுப்பி வைத்துள்ள கடித்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இக் கடிதத்தின் பிரதிகள் தலைவர் பிரபாகரனுக்கும் நோர்வேத் தூதுவர் வெஸ்ட்போர்க்கிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## பொ.ஐ.மு. மீண்டும் ஆட்சி அமைக்கும்!

### - அத்தாவுட செனவிரத்ன கூறுகிறார் -

பொதுஜன ஐக்கிய முன்னணி விரைவில் அரசு அமைக்கும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் அத்தாவுட செனவிரத்ன தெரிவிததுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலிந்து ஐக்கியதேசிய முன்னணிக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணையவுள்ளனர்.

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பால், பின்னடைவைச் சந்தித்துள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

## 500 அரசியல் கைதிகளுக்கு ஒப்பந்தத்தின் பின்னர் விடுதலை!

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட 500க்கு மேற்பட்ட தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டிருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்கள் அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னரே இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதேசமயம், மேலும் 225 பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு எதிரான வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

விடுவிக்கப்பட்ட அனைவருக்கும் சட்டநடவடிக்கைகள் எடுப்பதற்கு போதுமான சாட்சியங்கள் இல்லையென்று சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருந்தன.

## நிவாரணத்துக்கு அனுப்பப்பட்ட தரம் குறைந்த அரிசி அழிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நிவாரண விநியோகத்துக்காக யாழ்.மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தரமற்ற அரிசி அழிக்கப்படவுள்ளது.

பிரதம மந்திரியின் உணவு ஆலோசனைக் குழுவின் ஆலோசகர் டபிள்யூ.ஏ. விஜயதாசவின் பணிப்பின் பேரில் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரிசியின் தரத்தைப் பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு மேற்படி அரிசியை பரிசோதனை செய்யும். இவ்வாறு பரிசோதனை செய்து மனிதப் பாவனைக்கு உதவாது என்று மேற்படி குழுவினர் கண்டறியும் அனைத்து அரிசியையும் அழித்துவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அரிசி திறந்த சந்தைக்கு செல்வதைத் தடுப்பதற்காகவே மேற்படி அரிசி முழுமையாக அழிக்கப்படவிருக்கிறது. இதற்கான நடவடிக்கையை யாழ். செயலகம் மேற்கொண்டு வருகிறது. (க,லி)

## பொதுத் தேர்தல் நடந்தால் ஐ.தே.கவுக்கு கூடுதல் ஆசனங்கள்!

### கிடைக்கும் என்கிறார் எஸ்.பி.திசநாயக்க



(கொழும்பு)

எந்தச் சந்தர்ப்பத்திலும் பொதுத் தேர்தலை எதிர்நோக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது என்று அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க கூறியுள்ளார்.

மீண்டும் பொதுத் தேர்தல் நடக்குமானால் ஒவ்வொரு மாவட்டத்திலும் தற்போது இருப்பதை விடக் கூடுதலான ஒரு நாடாளுமன்ற உறுப்பினராவது ஐக்கிய தேசிய முன்னணி பெற்றுவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாகக் கண்டி, அநுராதபுர மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சி கூடுதலான நாடாளுமன்ற அங்கத்துவத்தைப் பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமக்கு இந்திய வாகனங்களா? எதிர்க்கிறார்கள் புதிய எம்.பிகள்

(கொழும்பு)

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து வாகனங்களை இறக்குமதி செய்வதை நிறுத்தியுள்ள அரசாங்கம், இவர்களுக்கு இந்தியத் தயாரிப்பு வாகனங்களை வழங்குவதற்கு எடுத்த முயற்சிக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இந்தியாவில் மாருதி, டாடா சபாரி, அம்பாசிடர் கார்களை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட முயற்சிகளை எடுத்திருந்தார். இந்திய அதிகாரிகளுடன் இவர் இது குறித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

ஆனால், அரசின் இத்திட்டத்துக்கு புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது எதிர்ப்பை, நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வை.ஆர்.டி.சில்வாவிடம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தியாவிலிருந்து வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பாக எந்தத் தீர்மானமும் உத்தியோகபூர்வமாக எடுக்கப்படவில்லை என நாடாளுமன்ற விவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுதந்திரக் கட்சியின் இரகசியக் கூட்டத்துக்குள் செல்போனை இயக்கி தகவல் வழங்கிய எம்.பி!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றபோது கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சரண குணவர்த்தன தனது செல்போனைப் பயன்படுத்தி தகவல்களை நேரடியாக வழங்கியது தெரியவந்துள்ளது.

கட்சியின் மத்திய குழுக்கூட்டத்திற்கு செல்போனுடன் செல்வதற்கு எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. அத்துடன் ஜனாதிபதி சந்திரிகாவின் இரகசிய கூட்டங்களிலும் செல்போன் பயன்படுத்துவதற்கு ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் தடைவிதித்துள்ளனர்.

எனினும் பாதுகாப்பு ஏற்பாடுகளையெல்லாம் மீறி சந்திரிகா கலந்து கொண்ட கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் செல்போனை இயக்கி தகவல் வழங்கியமை குறித்து விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் உயரதிகாரி ஒருவரே இதற்கான இரகசிய அனுமதியை வழங்கியதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கும் ஐ.தே.கவுக்கும் இடையில் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் தனப்பட்ட விசாரணைகளை ஜனாதிபதி சந்திரிகா தீவிரப்படுத்த உத்தரவிட்டுள்ளார்.

### றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.56 |
| சுபஹ் | 5.11 |
| உதயம் | 6.30 |
| லுஹர் | 12.26 |
| அஸர் | 3.48 |
| ம.்ரிப் | 6.20 |
| இஷா | 7.32 |

# வன்னியில் நிர்வாக மேலாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் விபரம்

வன்னிப் பெருநிலப்பரப்பில் நிர்வாக மேலாளர் பதவிகளுக்கு விண்ணப்பித்து, நேர்முகத்தேர்வில் தோற்றிய இருபத்தைந்து வணிக மற்றும் முகாமைத்துவப் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. நியமனம் பெறவிருப்பவர்கள் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிறு காலை 9.30 மணிக்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் தமக்குரிய நியமனக்கடிதங்களைப் பெற்றுக் கொளளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். நிர்வாக மேலாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பட்டதாரிகளின் பெயர் விபரம் வருமாறு:

ச.பகீதரன்,சி.மகேந்திரசர்மா, கோ.அ.பெலிசியா, அ.சயந்தினி, த.நிஷாந்தி, சு.சுபாஜினி, இ.கமலக் கண்ணன், இ.பாஸ்கரன், த.அஜந்தா, வ.கயல்விழி, பொ.லதா, இ.சிவகுமார், எஸ்.சத்தியவாணி, அ.தர்சன், எஸ்.திலகேந்திரன், செ.பானுமதி, ச.சிறிகரன், மா.தவலிங்கம், இ.அனுஷியா, ந.சோதிரூபன், சோ.ஜெயசீலன், ச.சுஜாதரன், ஆ.சிவரஞ்சினி, சி.நிமலன், வி.றமேஸ்.

## 20 வருடங்களுக்குப்பின் உகந்தையில் சூரன் போர்

அம்பாறை மாவட்டத்தில் எல்லைபுறத்தில் உள்ள உகந்தை முருகன் ஆலயத்தில் சுமார் இருபது வருடங்களுக்குப் பின்னர் சூரன்போர்த் திருவிழா இடம்பெற்றுள்ளது.

யால வனவிலங்கு அரணாலயப் பகுதியில் அமைந்துள்ள இந்த முருகன் ஆலயத்தில் இருபது வருடங்களுக்கு மேலாகப் பொதுமக்கள் செல்ல முடியாதிருந்தது. இதனால் ஆலயத்தில் திருவிழாக்கள் நடைபெறாமல் இருந்தன. பாணமைக்கு அப்பால் உள்ள இந்த முருகன் ஆலயத்தில் கடந்த ஞாயிறன்று இடம் பெற்ற திருவிழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## தமிழீழ மாணவர் ஒன்றியம் நூலக சேவை ஆரம்பிக்கும்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் ஒன்றியம் மாணவர்களின் வசதி கருதி நூலக சேவை ஒன்றை ஆரம்பிக்க உள்ளது.

இதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல்வேறு துறைசார்ந்த நூல்களைக் கொண்டதாகவும் அனைத்துச் சேவைகளையும் உள்ளடக்கியதாகவும் இப்புதிய நூலகத்தை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நூலகத்துக்காகக் கிடைத்தற்கரிய பெறுமதி மிக்க நூல்களை சேகரிக்கும் முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புபவர்களிடமிருந்தும் அன்பளிப்புகள் எதிர் பார்க்கப்படுகின்றன என்றும் மேற்படி மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (க,லி)

## யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவன காணிக்கொள்வனவுக்கு 15லட்சம் ரூபா ஒதுக்கீடு

(கொக்குவில் மேற்கு)

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு நிரந்தரக் காணியைக் கொள்வனவு செய்வதற்காக 15 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு நிரந்தரமாகக் காணியோ, அல்லது கட்டடமோ இதுவரை வழங்கப்படாததைக் கண்டித்து- கடந்த மாதம் 30ஆம் திகதி நடத்தப்பட்ட கண்டனப் பேரணியை அடுத்தே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (108)

## பேச்சுக்கள் இழுபட்டால் தமது கட்சிக்குச் சாதகமாம்!

### நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் கதிர்காமர்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் குறுகிய காலத்தில் முடிவடைவதற்குச் சாத்தியமில்லை. அது நீண்ட காலத்துக்கு இழுபட்டுச் செல்லும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இடம் பெற்ற போது தாய்லாந்து பேச்சுக்கள் தொடர்பாக விளக்கமளித்தபோதே கதிர்காமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் வழமைக்கு மாறாக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கதிர்காமர் மேலும் தெரிவிக்கையில்,

பேச்சுவரர்த்தைகள் நீண்ட காலத்துக்கு இழுபட்டுச் செல்வது அரசாங்கத்துக்குப் பாதகமான விளைவுகளையும், தமக்குச் சாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஊழியர் பற்றாக்குறையுடன் இயங்கும் நீதிமன்றம்

(வடமராட்சி)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஊழியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்வதில் பல சிரமங்களை அதிகாரிகள் எதிர்நோக்குகின்றனர்.

ஆறு எழுதுவினைஞர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்கள் இருந்த போதிலும், ஒரே ஒருவர் மட்டுமே கடமையாற்றுவதாகவும் மூன்று சுருக்கொழுத்தாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்கள் இருந்தும் எவருமே நியமிக்கப்படவில்லை யென்றும் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தெங்கு செய்கையாளர் மகஜர்

வட மாகாணத் தெங்குச் செய்கையாளர் சங்கத்தினர் தமது பிரச்சினைகள், நெருக்கடிகளைப் பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறி நிவர்த்தி செய்ய வழிவகுக்கும்படி யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

## சைவபரிபாலன சபையின் மாணவருக்கான போட்டிகள்

யாழ்.சைவபரிபாலன சபையால் ஆறுமுகநாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் பேச்சுப்போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்பிரிவு தரம் 12, 13 இக்கான பேச்சுப்போட்டிகள் 10 நிமிடங்களைக் கொண்டதாக "ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்", "ஆறுமுக நாவலர் பதிப்பாசிரியர்", "ஆறுமுக நாவலருக்கு நாம் செய்ய வேண்டியன" எனும் தலைப்புக்களிலும்,

மத்தியபிரிவு தரம் 9, 10, 11 இக்கான பேச்சுப்போட்டிகள் "ஆறுமுக நாவலரின் கல்விப்பணி", "ஆறுமுக நாவலரும் பேர்சிவல் பாதிரியாரும்", "ஆறுமுகநாவலரும் நல்லூரும்" எனும் தலைப்புக்களிலும்,

கீழ்ப்பிரிவு தரம் 6, 7, 8 இக்கான பேச்சுப்போட்டிகள் 5 நிமிடங்கள் கொண்டதாக "ஆறுமுகநாவலா", "ஆறுமுகநாவலரின் இளமைக்கல்வி", "ஆறுமுகநாவலரும் பிரசங்கமும்" எனும் தலைப்புகளிலும் இடம்பெறும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் 17ஆம் திகதிக்கு முன்னதாக தமது விண்ணப்பங்களை அனுப்பும்படி தேர்வுச்செயலாளர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.



பிரதமர் ரணிலுடன் முரண்பாடுடையவர் எனக் கருதப்படும் அமைச்சர் கரு ஜெயசூரிய, ஜனாதிபதி சந்திரிகாவுடன் மகிழ்ச்சியுடன் உரையாடும்காட்சி இது. அண்மையில் அளுத்கம பகுதியில் நடந்த பாடசாலை நிகழ்வொன்றில் இச் சந்திப்பு நடைபெற்றது .


உங்கள் அன்புச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நமது ஈழநாட்டில்!

முற்றிலும் இலவசமாக!!

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "நமது ஈழநாடும்" இணைகின்றது! உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்! உங்கள் செல்வத்தின் பிறந்த நாளன்று நமது ஈழநாடும், புகைப்படத்துடன் பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும்.

வாழ்க வளமுடன்!

சிறாரின் பெயர் :........................

முகவரி :........................

பிறந்த ஆண்டு :........................

கூப்பன்களஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

........................

பெற்றார் ஒப்பம்



உ

விவாஹ சோபன சுபமுகூர்த்தப் பத்திரிகை

*அன்புடையீர், வணக்கம்*

ஸ்வத்தி ஸ்ரீ நிகழும் ஸர்வமங்கள சித்திரபானு வருடம் ஐப்பசி மாதம் 29ஆம் நாள் (15.11.2002) வெள்ளிக்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரமும் பூர்வ ஏகாதசி திதியும் சித்த யோகமும் கூடிய காலை 9.30 மணிமுதல் 10.15 மணிவரையுள்ள தனு லக்கின சுபமுகூர்த்தத்தில்

உசன் பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதி ஐயரின் பௌத்திரியும் சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்களின் ஏக புத்திரியுமாகிய சௌபாக்கியவதி துர்க்காநந்தினியை

தெல்லிப்பளை சிவஸ்ரீ சிவசாமிக்குருக்களின் பௌத்திரனும் சிவஸ்ரீ தர்மராஜக் குருக்களின் சிரேஷ்ட புத்திரனுமாகிய சிரஞ்சீவி பிரம்மஸ்ரீ தர்மப்பிரதீப சர்மாவுக்கு

கன்னிகாதான, மாங்கல்யதாரண, பாணிக்கிரகணம் செய்ய பெரியவிளான் வடசேரிப் பிள்ளையாரின் அருளுடனும் அன்னை துர்க்காதேவியின் துணையுடனும் காஞ்சிகாமகோடி ஜெகத்குரு பீடாதிபதி சுவாமிகள் ஆசியுடன் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் மேற்படி சுபமுகூர்த்தம் தெல்லிநகர் துர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்:– 15.11.2002 வெள்ளிக்கிழமை காலை 5.30 மணி (மணமகன் இல்லத்தில்)

வதூவரகிரகப் பிரவேசம்:- மாலை 5மணி

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

சிவஸ்ரீ. இ.சுந்தரேஸ்வரக்குருக்கள் தம்பதிகள், மற்றும் உறவினர்கள், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், துர்க்காபுரம், தெல்லிப்பளை.

சிவஸ்ரீ. சி.தர்மராஜக் குருக்கள் தம்பதிகள், சிவஸ்ரீ. ஜெ.பாலசுப்பிரமணியக்குருக்கள் தம்பதிகள், சிவஸ்ரீ. ஆ.பழனிக்குருக்கள் தம்பதிகள், பிரம்மஸ்ரீ. த.தர்மதர்ஷன் சர்மா, "லட்சுமி வாசம்", பெரியவிளான், இளவாலை.

*இரு வீட்டார் அழைப்பு*



### கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

# கணிதம்

பகுதி - II

*1ஆம் வினாவுக்கும் வேறு ஏழு வினாக்களுக்கும் மட்டும் விடை தருக.*

1) (a) ஒருவர் ரூ.10,000 ஐ 8% வருட வட்டிப்படி 2 வருடங்களுக்கு கடனாகப் பெற்றார்.
   (I) அவர் 2 வருட முடிவில் செலுத்தும் எளியவட்டியை காண்க.
   (II) அவர் 2 வருட முடிவில் செலுத்தும் கூட்டுவட்டி யாது?
(b) (I) காரணிப்படுத்துக: $36x^2 - 25$
   (II) தீர்க்க: $3x+2y=5$
   $2x-2y=0$
(c) (I) சாய்சதுரம் ஒன்றின் இரு மூலை விட்டங்களினதும் நீளங்கள் முறையே 8cm, 6cm எனின், சாய்சதுரப் பக்கம் ஒன்றின் நீளத்தைக் காண்க.
   (II) PQ=13cm உம், SR = 7cm உம் ஆகும். PQ, SR ஆகிய பக்கங்களுக்கு இடையே உள்ள செங்குத்துத் தூரம் 11cm உம் ஆகும். சரிவகம் PQRS இன் பரப்பளவைக்காண்க.
(d) (I) 14cm ஆரையுடைய வட்டத்தின் பரப்பளவைக் காண்க. ($\pi = 22/7$)
   (II) 10cm விட்டமுடைய வட்டத்தின் பரிதியைக் காண்க. ($\pi = 3.14$)
(e) 21 மாணவர்கள் மாதப் பரீட்சை ஒன்றில் கணிதத்தில் பெற்ற புள்ளிகள் வருமாறு
   42 22 17 65 56 31 33 (I) இப்பரம்பலின் காலணையிடைவீச்சு.
   64 45 58 33 20 74 26 (II) இப்புள்ளிகளின் இடையம்.
   45 39 28 35 62 52 54 (III) இப்புள்ளிகளின் ஆகாரம்.
(f) $\xi = \{1,2,3,4,5,6,7,8,9,10\}$
   $A = \{2,3,5,7\}$ $B = \{1,3,5,7,9\}$ இத்தரவிலிருந்து,
   (I) AUB (II) AnB (III) A' (IV) B' என்பவற்றைக் காண்க.

2) ஒரு பொருளின் பெறுமதி ரூ.30,000. அதில் ரூ.18,000 ஐ முதலில் செலுத்தி மீதியை 12 சம மாத தவணைக் கட்டணங்களாக செலுத்தலாம். இதற்காக அவர் 12% வருடவட்டி செலுத்துவாராயின் அவர் தவணை ஒன்றில் செலுத்தும் தொகையைக் காண்க.

03) சார்பு $y=x^2-4$ இன் வரைபை வரைக.

| x | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|
| Y | 5 | -- | -3 | -4 | -- | 0 | 5 |

(I) அட்டவணையில் வெற்றிடங்களை நிரப்புக.
(II) பொருத்தமான அளவிடையை எடுத்து வரைபை வரைக.
(III) வரைபில், இழிவுப் புள்ளியின் ஆள்கூறை எழுதுக.
(IV) அதன் சமச்சீர் அச்சை எழுதுக.
(V) சார்பின் பெறுமானம் மறையாகும் போது x இன் வீச்சை எழுதுக.
(VI) $x^2-x=3=0$ இன் மூலங்களை காண்க.

04) (I) ஒரு நேர் விளிம்பு, கவராயம், cm/mm அளவிடை ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி அமைப்பு கோடுகளைத் தெளிவாகக் காட்டி BC = 6cm, ABC = 90, BA = 4cm ஆகுமாறு ஒரு முக்கோணி ABC ஐ அமைக்க.
(II) ACயின் நீளத்தை அளந்து எழுதுக.
(III) முக்கோணி ABCயின் சுற்றுவட்டத்தை அமைக்க.
(IV) அதன் ஆரையை அளந்து எழுதுக.

05. (a) சுருக்குக: $\left\{\frac{27}{64}\right\}^{1/3} \times X^0 \times \left\{\frac{16}{9}\right\}^{1/2}$
(b) தீர்க்க. $3^{x-1} = 243$
(c) மடக்கை வாய்பாட்டை உபயோகித்து பெறுமானம் காண்க?
$$\frac{3.75^2 \times 0.05783}{12.54}$$


06. (a) செய்தித்தாள் விளம்பரம் ஒன்றை வெளியிடுவதற்கு முதல் பத்து சொற்களுக்கு ரூ.45 உம் அடுத்த பத்து சொற்களுக்கு சொல் ஒன்று ரூ.8 உம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூ.12 உம் அறவிப்படுகின்றது.
   (I) 11 சொற்களைக் கொண்ட விளம்பரம் ஒன்றை வெளியிடுவதற்கு கட்டணம் யாது?
   (II) 25 சொற்களைக் கொண்ட விளம்பரம் ஒன்றை வெளியிடுவதற்கு கட்டணம் எவ்வளவு?
   (III) b (b > 20) சொற்களைக் கொண்ட விளம்பரம் ஒன்றை வெளியிடுவதற்கு செலவாகும் பணத்தைக் காட்டுவதற்கு b அடங்கிய கோவையை எழுதி, அதனைச் சுருக்கிக் காட்டுக?
   (IV) ஒரு விளம்பரத்தை முதற் பக்கத்தில் வெளியிடுவதற்கு விளம்பரக் கட்டணத்துடன் 5% மேலதிக கட்டணமும் சேர்த்து ரூ.257.25 கொடுக்கப்பட்டது. அவ்விளம்பரத்தில் இருந்த சொற்களின் எண்ணிக்கை யாது?

07. 11ஆந் தரத்து மாணவன் ஒருவன் தனக்கு ஒதுக்கப்பட்ட ஒரு செயற்திட்டத்துக்காக குறித்த கடை ஒன்றில் முப்பது நாடகளில் விற்கப்பட்ட அரிசியின் அளவுகள் பற்றிப் பெற்ற தகவல்கள் வருமாறு.

| விற்ற அரிசியின் அளவு (Kg) | 40-54 | 55-69 | 70-84 | 85-99 | 100-114 | 115-129 |
|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை மீடிறன்(f) | 2 | 3 | 6 | 8 | 7 | 4 |

(I) மேற்குறித்த தகவல்களுக்கு ஏற்ப இக்கடையில் நாள் ஒன்றில் விற்கப்பட்ட அரிசியின் அளவு எத்தனை கிலோகிராமாக இருக்கலாம்?
(II) வகுப்பாயிடை 85-99 இன் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாக கொண்டு நாள் ஒன்றில் விற்கப்படும் அரிசியின் இடை அளவை கிலோக்கிராமில் காண்க.
(III) எதிர்வரும் வாரத்தில் 7 நாட்களில் கடையில் விற்கப்படக்கூடுமென எதிர்பார்க்கப்பட்ட அரிசியின் அளவு எத்தனை Kg?


08. (a) $x^2 + 3x + 1 = 0$ என்பதை நிறைவர்க்கலின் மூலம் தீர்க்க?
(b) $மட_a 3 + 2\, மட_a 4 - மட_a 2 + மட_a 6$ என்பதைச் சுருக்குக?
(c) தீர்க்க $மட_{10} x + மட_{10} 4 = மட_{10} 5 + மட_{10} 8$





09. ABCD ஒரு நாற்பக்கல். AB=AD, BC=CD, மூலைவிட்டங்கள் AC,BD என்பன 0 இல் வெட்டுகின்றன. பின்வருவனவற்றை நிறுவுக.
(I) $\triangle ABC \equiv \triangle ADC$
(II) $B\hat{A}C = D\hat{A}C$
(III) $\triangle ABO \equiv \triangle ADO$
(IV) $DO = OB$
(V) $AO \perp BD$

10. ஒரு கிடையான தளத்திலுள்ள ஒரு கோயிலுடைய கோபுரத்தின் உச்சியின் உயரத்தை ஒருவன் அறிய விரும்புகிறான். அவன் குறிப்பிட்ட ஒரு புள்ளியில் இருந்து பார்க்கும் போது உச்சியின் ஏற்றக் கோணம் $45^0$ எனக்காண்கிறான். கோபுரத்தை நோக்கி 30m நடந்த பின் அதன் ஏற்றக்கோணம் $60^0$ ஆக அவதானிக்கின்றான். அவனுடைய உயரத்தை 1.5m எனக் கொண்டு கோபுரத்தின் உச்சியின் உயரத்தைக் காண்க?

**எஸ்.எஸ்.கண்ணன்**



# மாணவர் மலர்





### கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரி வினாத்தாள்

# வணிகக்கல்வியும் கணக்கீடும்

1. பின்வரும் கூற்றுக்களில் வணிகம் (Business) சம்பந்தமான மிகச் சரியான கருத்தினை தரும் கூற்றினை தெரிவு செய்க.
   1. வியாபாரத்தினையும், துணை நிலைச் சேவைகளையும் உள்ளடக்கியது.
   2. இலாபம் பெறும் நோக்கில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு நடவடிக்கையினையும் உள்ளடக்கியது.
   3. எல்லா உற்பத்தி நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.
   4. வர்த்தக சேவைகளையும் நேர்ச்சேவைகளையும் உள்ளடக்கியது.

2. பின்வருவனவற்றில் மூன்றாம் தர உற்பத்தியை மட்டும் உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.
   1. காப்புறுதி/போக்குவரத்து/மருத்துவம்
   2. அகழ்வு/சில்லறை/வியாபாரம்/வங்கி
   3. மீன்பிடி/காப்புறுதி/போக்குவரத்து
   4. கட்டட ஆக்கம்/அகழ்வு/விவசாயம்

3. நேர் உற்பத்தி என்பதன் பொருள்
   1. இயற்கையிலிருந்து பெறப்படும் பொருட்கள்
   2. வாடிக்கையாளரின் நேரடிக் கட்டளைக்கான உற்பத்தி
   3. சந்தைக்கான உற்பத்தி
   4. சொந்த நுகர்வுக்கான உற்பத்தி

4. ஒரு உற்பத்திப் பொருள் எனப்படுவது
   1. பண்டங்களும் சேவைகளும்
   2. தொட்டுணரக்கூடிய பண்டங்கள்
   3. கைத்தொழிற்சாலையில் செய்யப்பட்ட அனைத்தும்
   4. பண்டங்கள், சேவைகள், ஆலோசனைகள், நிகழ்வுகள், இடம், நபர்கள்

5. நல்ல பணத்தின் தன்மையல்லாதது
   1. பாதுகாத்துக் கொள்ளக்கூடியது
   2. தேவைக்கு ஏற்ப பயன்படுத்தமுடிதல்
   3. கொண்டு செல்ல இலகுவாக இருத்தல்
   4. அங்கீகரிக்கப்படும் மாற்றூடகமாக இருத்தல்

6. பின்வருவனவற்றுள் சில்லறை வியாபாரம் ஒன்றின் வெற்றி எப்பிரதான காரணியில் தங்கியுள்ளது.
   1. விளம்பரம்
   2. தொடர்பாடல்
   3. கடை அமைவிடம்
   4. வாடிக்கையாளரின் திருப்தி

7. வினைத்திறனான இருப்புக் கட்டுப்பாட்டினை வைத்திருப்பதன் பிரதான அனுகூலம்
   1. இருப்புக் கட்டுப்பாடு தொடர்பான மொத்தக் கிரயத்தை இழிவுபடுத்தமுடியும்.
   2. வாடிக்கையாளர் தேவையினை தொடர்ச்சியாகப் பூர்த்திசெய்யமுடியும்.
   3. சரியான நேரத்தில் தரமான பொருட்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
   4. இருப்பு மிகையினை அல்லது பற்றாக்குறையினைத் தவிர்க்கமுடியும்.

8. பின்வருவனவற்றில் இருவழித் தொடர்பு இல்லாத தொடர்பாடல்
   1. சுற்றுநிருபம்
   2. கூட்டங்கள்
   3. அறிவித்தல் பலகை
   4. தொலைபேசி

9. இணைய(Internet) வசதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஒருவரிடம் இருக்க வேண்டியது
   1. கணினி
   2. மொடம்
   3. சாதாரண தொலைபேசி
   4. மேற்கூறிய எல்லாம்

10. ஏற்றுமதிப் பன்முகப்படுத்தல் என்பது
   1. கைத்தொழில் பொருள் ஏற்றுமதிகளை அதிகரித்தல்
   2. தற்போது ஏற்றுமதியாகும் பொருட்களுடன் புதிய ஒரு அம்சத்தைச் சேர்த்தல்
   3. குறிப்பிட்ட நாடுகளுக்கு மட்டுமல்லாமல் ஏற்றுமதிச் சந்தையை விஸ்தரித்தல்
   4. ஒரு வகை ஏற்றுமதிப் பொருட்களில் மாத்திரம் தங்கி இருக்காமல் பலவித பொருட்களை ஏற்றுமதி செய்தல்

**எஸ்.கே.தவனேசன்**
அச்சுவேலி மத்திய கல்லூரி.

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர)

## மாதிரி வினாத்தாள்

# வரலாறும் சமூகக்கல்வியும்

❖ *கீழே தரப்பட்டுள்ள உலகப் படத்தைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 5 வரைக்குமான வினாக்களுக்கு விடை அளிக்கவும்.*




1. இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சியின் முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடந்த சட்டாஹிப் கடற்படைத் தளம் அமைந்துள்ள "பட்டாயா" நகரத்தினைக் குறிக்கும் எழுத்து?
   I) A II). B III) C IV) D
2. பிரனீஸ் மலையினைக் குறிக்கும் இலக்கம்
   I) 1 II) 2 III) 3 IV) 4
3. அம்புக்குறியினால் காட்டப்பட்டுள்ள நீரிணை
   I) ஜிப்ரோல்டர் II) பெரிஸ் நீரிணை
   III) மொசாம்பிக் நீரிணை IV) பாக்கு நீரிணை
| 094. யா/வெ/613 | செல்வி.இராசம்மா சண்முகராஜா |
| 095.யா/வெ/615 | திரு.செல்லையா நவரத்தினம் |
| 096. யா/வெ/616 | திரு.நாகலிங்கம் கணேசலிங்கம் |
| 097. யா/வெ/627 | செல்வி.சறோஜினிதேவி சிவலோகநாதன் |
| 098. யா/வெ/630 | திரு.முத்துலிங்கம் நடராஜா |
| 099. யா/வெ/632 | செல்வி.மல்லிகா சிவானந்தன் |
| 100. யா/வெ/636 | திரு.அரியகுட்டி சிவனேஸ்வரன் |
| 101. யா/வெ/637 | செல்வி.ஜீவரஞ்சினி பாலேந்திரன் |
| 102. யா/வெ/641 | திரு.கந்தசாமி இராஜன் |
| 103. யா/வெ/676 | திரு.வெள்ளையர் தெய்வேந்திரம் |
| 104. யா/வெ/687 | செல்வி.பராசக்தி விநாயகதேவராஜா |

நாளை தொடரும்...

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*வளரும் பயிரை முளையிலேயே தெரியும்...*
– பழமொழி.

# நமது நோக்கு

## ஆரோக்கியமான இளம் சமுதாயம் வேண்டும்!

இன்று எமது சமூக அமைப்பில் மிகக் கவனமெடுக்கப்படவேண்டிய பலவீனமான தொகுதியினராக (Weaker Section) சிறுவர்கள் காணப்படுகின்றனர்.

நாளைய சமூகத்தைச் சிருஷ்டிக்கப்போகும் சிறுவர்கள் மீதான சமூகக்கவனிப்பும், வழிநடத்தலும்-மிகக் குறைந்திருப்பதன் வெளிப்பாடுகளை இன்று யாழ். குடாநாட்டில் பரவலாக அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

இந்த வகையில்-கோப்பாய் பகுதி வீடொன்றில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட கோஷ்டியொன்றை மடக்கிப் பிடித்தபோது அக்குழுவிலிருந்த ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் தனது தந்தையுடன் அகப்பட்டுக் கொண்ட செய்தி - மனதை அதிரவைப்பதாக அமைந்தது.

நல்வழி காட்ட வேண்டிய தந்தையே, தனயனை திருட்டு வழிக்குப் பயன்படுத்திய இந்தக் கொடூரம், எமது சமூக அமைப்பு எவ்விதம் சீர்குலைவுக்குட்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இதை ஒரு சாதாரண நிகழ்ச்சியாக பார்த்து விட முடியாதபடிக்கு-இன்று எம் கண் முன்னாலேயே இன்னும் ஏராளமாக - சிறுவர் மீதான அழுத்தங்கள், வன்கொடுமைகள், நெறிபிறழ்தல்கள் நடந்தேறி வருகின்றன.

யாழ்.நகரப் பகுதிக்குள் - இரந்து கையேந்தும் சிறுவர்களை நாம் தினமும் பார்க்கின்றோம். சில சிறுவர்கள் - தமது பெற்றோராலேயே இவ்வாறு இரந்து வாழ்தலுக்கு உட்படுத்தப்படுவதை சமூகவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலுமுள்ள வாகனத் திருத்தகங்கள், வியாபார நிலையங்கள், உணவு விடுதிகள், நடமாடும் உணவு விற்பனை நிலையங்கள், விவசாய நிலங்கள் எனப் பல இடங்களிலும் இன்று சிறார்கள் வேலைக்கமர்த்தப்படுவது முன்னெப்போதுமில்லாத அளவில் அதிகரித்துள்ளது.

இவர்களில் பலர் - தமது பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திவிட்டு, தமது குடும்பத்தினரின் இசைவுடன், முழுநேரப் பணியாளர்களாக மாறியுள்ள கொடுமையை எவரும் கவனிப்பதாகத் தெரியாதநிலை அல்லது இதை ஒரு குற்றச் செயலாகப் பார்க்கும் மனோ நிலை எவரிடமும் இல்லாமலும் போய்விட்டது வேதனைக்குரியது.

ஒருகாலத்தில் எத்தகைய கஷ்டங்கள் வரினும் கல்வியே பெரும் மூலதனம் எனப் பெருமைப்பட்ட யாழ்.சமூகத்தில், கற்றலை இடைநிறுத்திவிட்டுத் தம் பிள்ளைகள் தொழில் செய்வதை ஊக்குவிக்கும் பெற்றோர்கள் உருவாகியிருப்பது கவனமெடுக்கப்பட வேண்டியதாகும்.

சிறார்கள் மீதுள்ள அழுத்தங்களில் மேலும் இரண்டு தலையாய விடயங்கள் - தனிப்பட்ட வகுப்புக்களும், தொலைக்காட்சி பார்த்தலுமாகும்.

தனிப்பட்ட வகுப்புக்கள் - பாடசாலை விட்டுவரும் சின்னஞ்சிறு மொட்டுக்களின் மீதான மிகப்பெரும் பாரச்சுமை மட்டுமல்ல, அவர்களது பொழுதுபோக்கு நேரத்தையும் கொன்றுவிடுவதாகும்.

இயற்கையை இரசிப்பது முதல் - கற்பனைக்கான நேரம் வகுத்தல், விளையாடி தேக ஆரோக்கியம் பேணுதல் வரை- இன்றைய சிறார்களுக்கு அவை எட்டாக்கனியாகி விடுகின்றன.

யாழ்.குடாநாட்டிலுள்ள சிறுவர் பூங்காக்களில் மாலை நேரங்களில் எத்தனை சிறுவர்களைப் பார்க்க முடிகிறது?

மாறாக- பாடசாலைச்சீருடை களைந்ததும்- அடுத்த பாடச்சுமையுடன் வீதிகளில் தள்ளாடி நடக்கும் சிறார்கள்தான் இன்று கண்களில் தென்படுகின்றனர்.

இந்த தொடர்ச்சியான கற்றல் - அச்சிறு பிள்ளைகளின் மீது கல்வி சார்ந்த வெறுப்பையே உண்டுபண்ணிவிடும் என்ற அடிப்படை உளவியல் கூடப் பெற்றோர்களுக்குத் தெரியாதது வினோதம்தான்.

இன்று பரவலாகி வரும் தொலைக்காட்சி பார்க்கும் பழக்கம் - அறிவுசார்ந்த அல்லது தகவல் தரும் அல்லது சூழலைப் பரிச்சயப்படுத்தும் நிகழ்ச்சிகளைத் தவிர்ந்த, வெறும்- உணர்ச்சிமயமான, வன்முறைசார்ந்த, பாலியல் இச்சைகளைத் தூண்டக்கூடிய நிகழ்ச்சிகளால் நிரம்பியுள்ள நிலையானது - சிறார்களின் உளவியலில் உண்டாக்கும் மனப்பதிவுகளைப் பற்றிப் பெற்றார்கள் சிந்திக்க மறுப்பது ஏன்? இவை, சமூகப்பிறழ்வுகளையும், சமூக முரண்பாடுகளையும் தோற்றுவிப்பதற்குரிய வலுமிகுந்த பாதிப்புக்களென்பதை அவர்கள் கவனத்தில் கொள்ளாததன் தார்ப்பரியம் என்ன?

இன்றைய சமூகத்தின் வழிகாட்டல்களே நாளைய சமுதாயத்தைக் கட்டமைக்கும் என்ற உண்மையைப் பெற்றோர்களும் சமூகமும் உணர்ந்து கொண்டு - தமது சிறார்களை நல்ல முறையில் வளர்க்கவும், வழிநடத்தவும் முன்வரவேண்டும்.

சமூகப்பொறுப்புணர்ந்தவர்கள் - இந்த விடயத்தில் கூடுதல் கவனமெடுத்து நமது இளஞ்சமுதாயத்தைக் காக்க வேண்டும். இது உடனடியாகச் செய்யப்பட வேண்டியது மட்டுமல்ல, ஆழ்ந்த நோக்குடனும் மேற்கொள்ளப்படவேண்டும்.

# தொண்டமான் - சந்திரசேகரன் மோதல்; அமைச்சரவைக் கூட்டத்திலும் எதிரொலிப்பு!


(கொழும்பு)



ஐ.தே.மு. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கும் அமைச்சர் சந்திரசேகரனுக்கும் இடையிலான பூசல்கள் அதிகரித்துள்ளன.

மலையக அரசியல் தலைவர்களான இவர்கள் இருவருக்கும் இடையிலான மோதல்கள் அமைச்சரவைக் கூட்டம்வரை வந்திருக்கின்றது. இறுதியாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இருவரும் பலத்த வாய்மோதலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேல் கொத்மலை நீர்மின்நிலையத் திட்டத்துக்கு ஆறுமுகம் தொண்டமான் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற அதேவேளை, அமைச்சர் சந்திரசேகரன் இதனை ஆதரித்துள்ளார்.



தனக்கு சமூக, அபிவிருத்தி அமைச்சுத் தேவையில்லை என்றும், தொண்டமானின் வசமுள்ள அமைச்சுக்களில் ஒன்றைத் தனக்குத் தரும்படி சந்திரசேகரன் கோரிவருவதாகவும் கூறப்படுகின்றது. இதனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பலத்த நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ~ மட்டக்களப்பு மாவட்டத்தில்~

# கைதானோர், காணாமற்போனோர் விவரங்களைத் திரட்ட குழு அமைப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் போர்ச்சூழலில் காணாமற்போனவர்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டி உரிய நடவடிக்கை எடுப்பதுடன் அவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுத்தல், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளிலும், தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டவர்களின் விடுதலை தொடர்பாக உரிய அழுத்தங்களைக் கொடுப்பதற்காகவும் குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கத்தோலிக்க மண்டபத்தில் - சட்டத்தரணிகள், சமூக சேவையாளர்கள், தொண்டர் நிறுவனங்களின் பிரதி நிதிகள், ஊடகவியலாளர்கள் இணைந்து இந்த அமைப்பை உருவாக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை, சாவகச்சேரியில் மழைவீழ்ச்சி பதியும் நிலையங்கள்

## விரைவில் அமைக்கப்படும்

(உரும்பிராய்)

பருத்தித்துறை, சாவகச்சேரி, ஆகிய பிரதேசங்களிலும் மிக விரைவில் மழைவீழ்ச்சியைப் பதிவு செய்யும் நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன்பின்னரே, தாம் குடாநாட்டு மக்களுக்கும், மீனவர்களுக்கும் காலநிலை நிலவரங்களைத் தெளிவாகத் தெரிவிக்க முடியும் என - திருநெல்வேலி வளிமண்டல ஆராய்ச்சி திணைக்கள தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

கடந்த 5ஆம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் மழை வீழ்ச்சியை அளவிடும் நிலையமொன்று நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (84)

# பஸ்-வான் விபத்தில் நாவற்குழியில் ஒருவர் காயம்!

(சாவகச்சேரி)

முகமாலையில் இருந்து யாழ் நோக்கி வந்து கொண்டிருந்த மினிபஸ்ஸும்- கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த சொகுசு வானும் எதிரெதிராக மோதிக் கொண்டதில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக்காலை நாவற்குழிச் சந்தியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மினிபஸ்ஸில் பயணித்த ஒருவர் காயமடைந்ததோடு, சொகுசு வான் வீதியிலிருந்து விலகி அருகிலிருந்த பள்ளத்திற்குள் சரிந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து பொலிசார் விசாரணை நடாத்தி வருவதோடு - மினிபஸ் சாரதிக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (29)

# சமாதானப் பேச்சுக்கு எதிராக கருத்து வெளியிட வேண்டாம்!

## கட்சி உறுப்பினர்களுக்கு சந்திரிகா அறிவுறுத்தல்

(கொழும்பு)

தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு எதிராகவோ, அதனைப் பாதிக்கின்ற விதத்திலோ- கட்சிப்பிரமுகர்களோ உறுப்பினர்களோ கருத்துத் தெரிவிக்க வேண்டாம் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார்.



தமது கட்சிப் பிரமுகர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கிய உத்தரவில், அரசாங்கத்தின் குறைபாடுகள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேரடியாகத் தெரியப்படுத்துமாறும், இது குறித்து பகிரங்கமாகக் கருத்து எதையும் தெரிவிக்க வேண்டாம் என்றும் ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

# பிரதேச செயலர் இடமாற்றம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலராக தற்போது கடமையாற்றும் வேதநாயகன் கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் நிர்வாக சேவை அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை அதிகம் நிலவுவதால் மேற்படி இடமாற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (க,லி)



# குறைதீர் மன்றம்

பொன்னாலை மக்களாகிய நாம் யுத்தத்தின் காரணமாக 1990ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பல கஷ்டங்களை அனுபவித்த நிலையில் - தற்போதும் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத காரணத்தால் மூளாய் **J**/171 கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கின்றோம்.

இருக்க இடமின்றி கஷ்டப்பட்ட எமது நிலையறிந்த **UNHCR** நிறுவனமும் **RRAN**னும் இணைந்து, அரை நிரந்தர வீடுகள் கட்டித்தரமுன்வந்தன. முதற்கட்டமாக, மூளாய் **J**/171 கிராம சேவையாளர் பிரிவில் 46 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, பொருட்கள் வழங்கும் பணியுடன் வீடு கட்டுதல் ஆரம்பமாகியது. தற்பொழுது 46 வீடுகளில் 39 வீடுகள் பூரணமாக க்ட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்னமும் 07 வீடுகள் கட்டிமுடிக்கப்படவில்லை.

வீடுகள் கட்டுவதற்கு **UNHCR** இனால் கொடுக்கப்பட்ட பணத்திற்கான பொருட்கள் மட்டுமே எமக்கு வழங்கப்பட்டுள்ளன. **RRAN** கொடுக்கவேண்டிய பணம் எமது 7 வீடுகளுக்கும் கிடைக்காதபடியால் எமது வீடுகள் பூரணப்படுத்தப்படவில்லை.

எனவே அரை நிரந்தர வீடுகள் - அரைகுறை நிலையில் இருக்கின்ற நிலையை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எடுத்துக் கூறி - தங்களது குறைதீர்மன்றம் மூலமாக இது தொடர்பில் நல்ல முடிவைத் தருமாறு எதிர்பார்க்கிறோம்.

பாதிக்கப்பட்ட 7 பயனாளிகள் சார்பில்,
மா.நல்லதம்பி.

**நமது ஈழநாடு:-**

தங்களது மேற்படி விடயம் தொடர்பாக **UNHCR** அமைப்பினருடனும் சங்கானை பிரதேச செயலகத்தினைச் சேர்ந்த உதவித் திட்டமிடல் பணிப்பாளர் **K**.தர்மராஜாவுடன் தொடர்பு கொண்டு வினவியபோது -

**UNHCR** அமைப்பினரும் **RRAN** நிறுவனத்தினரும் இணைந்து செய்த 2001ஆம் ஆண்டுக்கான நுண்கருச் செயற்திட்டத்தில் 'அரை நிரந்தர வீடுகள்' - (**semi permarnent Houses**) கட்டுவதற்கான செயற்திட்டத்தின் பிரகாரம், சங்கானை பிரதேசசெயலர் பிரிவில் 87 வீடுகள் தெரிவு செய்யப்பட்டன. இதில் தாங்கள் கூறிய, தங்கள் கிராம சேவையாளர் பிரிவில் 46 வீடுகள் தெரிவு செய்யப்பட்டன. சங்கானை பிரதேச செயலகத்திற்கு 2001 ஆம் ஆண்டு மேற்படி நுண் கருத்திட்டத்திற்கு 87 வீடுகளுக்குப் பதிலாக 80 வீடுகளுக்கே நிதி ஒதுக்கீடு கிடைத்தது. இதனாலேயே தங்களுக்கான 7 வீடுகள் பூர்த்தியாக்கப்படாமல் விடப்பட்டதாகச் சங்கானை உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

எனினும் - மேற்படி தங்கள் வீடுகளைப் பூரணப்படுத்துவது தொடர்பில் சங்கானைப் பிரதேச செயலரும், உதவித் திட்டமிடல்பணிப்பாளரும் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

தங்கள் வீடுகள் பூரணப்படுத்தப்படாததை அரசாங்க அதிபரின் உடனடிக் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதோடு, 05.11.2002 அன்று சங்கானைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டத்தில் (**DCC**) உங்கள் வீடுகள் பூரணப்படுத்தப்படாமல் இருப்பது பற்றி, பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்திடம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக சிவாஜிலிங்கம் எம்.பி. நடவடிக்கை எடுக்க உறுதியளித்துள்ளதாக அறிய முடிகின்றது.

அதேவேளை - இவ்விடயத்தில்:-

தாங்கள் - தங்கள் கிராம சேவையாளருடனும், பிரதேச செயலகத்துடனும தொடர்ந்து இதுபற்றித் தொடர்புகளை பேணியவாறு இருக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

**RRAN** நிறுவனம் தற்பொழுது நிர்வாக மறுசீரமைப்பிற்குள்ளாக்கப்பட்டுள்ளதால், இவ்விடயத்தில் அத்தாபனத்தினிடம் விளக்கம் கோரமுடியவில்லை. மிக விரைவில் தங்களுக்கான உதவிகளைப் பெற்றுத்தர 'நமது ஈழநாடு'ம் - இதுபற்றி தொடர்ந்து முயற்சி செய்யும்.

# பெண்கள் மத்தியிலான விழிப்புணர்வை வளர்க்க பல்வேறு வழிகளிலும் நாம் முனைப்பாயுள்ளோம்!

**யாழ். மாவட்டத்தில் பெண்கள் அபிவிருத்தி நிலையம் மூலம் திருமதி சரோஜா சிவச்சந்திரன் பல சேவைகளை ஆற்றிவருகின்றார். பெண்கள் பற்றிய விழிப்புணர்வு, பாதுகாப்பு, உரிமைகள் சம்பந்தமாக நிலையத்தினூடாக பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றார். அது பற்றி அவரே சொல்கிறார்......**

எமது நிறுவனம் பெண்களுடைய ஆற்றல், ஆளுமை, சுயசார்புப் பொருளாதாரம் விருத்தி செய்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. அத்தோடு பெண்களுககு இழைக்கப்படும் வன்முறைகள், வீட்டு வன்முறைகள், சிறுவர் பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகளையும் மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. இத்திட்டங்களை குறுகியகால, நீண்டகால செயற்திட்டங்களாக வகுத்து செயற்படுத்தி வருகின்றோம்.




### கருத்தரங்குகள்

பெண்கள் சுயமாக இயங்கக்கூடிய செயற்பாடுகள் இனங்காணப்பட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை எமது அமைப்பினூடாக கிராம மட்டத்துககு எடுத்துச் சென்று, அங்கு சிறந்த தலைமைப் பண்புடைய பெண்கள் பலரை உருவாக்கியிருக்கிறோம். இவர்களுக்குப் பயிற்சி அளிப்பது மூலம், இவர்களைக் கிராமங்களில் மையப் பணியாளர்களாகச் செயற்பட வைத்துள்ளோம்.

முரண்பாடுகளை தீர்க்கும் வழிமுறைகள் தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்குகளையும் எமது நிலையம் செயற்படுத்தி வருகின்றது. இது சம்பந்தமாகப் பாடசாலைகளில் பல கருத்தரங்குகளை வைத்துள்ளோம். இதனூடாகப் பல .அறிக்கைகளை பாடசாலை நிர்வாகத்திடம் கையளித்துள்ளோம்.

இன்று மாணவர்கள் மத்தியில் நிலவும் மாறுபாடான போக்குகள், அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் போன்றவற்றை சாதுரியமாகத் தீர்ப்பதற்கான கருத்தரங்குகளையும் ஒழுங்கு செய்து, அதன் மூலம் பல பிரச்சினைகளைத் தீர்த்துள்ளோம்.

### நலன் காக்கும் பிரிவு

இதுவரை காலமும் யாழ். பிரதேச கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இலவசமாக 'திரிபோஷ' கிடைக்காமல் இருந்துவரும் நிலையில், இதனை ஈடுசெய்யும் முகமாக 'திரிபோஷ' போன்ற போஷாக் குணவை (சக்தி) எமது தாய்சேய் நலன்காக்கும் பிரிவு தயாரித்து வழங்கியது. குறிப்பாக யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் சுகவாழ்வுநிலையம், அகதிமுகாம்கள், சனசமூக நிலையங்கள் போன்றவற்றினூடாகவே இந்த போஷாக்குணவு வழங்கப்பட்டது. இதன்மூலம் கர்ப்பிணித் தாய்மார்களின் போஷாக்கின்மையை ஓரளவுக்கு குறைக்கக் கூடியதாக இருந்துள்ளது.

பாடசாலைச் சிறுவர்களின் கல்வி மட்டத்தில் பின்னடைவு ஏற்படாமல் வருடா வருடம் தெரிவுசெய்த வசதி குறைந்த மாணவர்களுக்கென அன்பளிப்பாகப் பெறப்படும் பாடசாலை உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகினறன.

### சட்ட ஆலோசனை

முக்கியமாக போர்ச்சூழல் காரணமாக மிகத் தாக்கமடைந்த குடும்பங்கள், தமது பலவீனத்தைத் தாங்கிக் கொள்ளமுடியாத குடும்பங்கள், குடும்பச் சுமைகளில் அல்லலுறும் பெண்கள், பிரதான உழைப்பாளரை இழந்து உளப் பாதிப்புக்குள்ளாகிய பெண்கள் போன்றவர்களின் பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கு இலவச சட்ட ஆலோசனை பிரிவு ஒன்றை ஏற்படுத்தியுள்ளோம். யாழ்ப்பாணத்தில் முதன் முதல் இச் சட்ட ஆலோசனையை வழங்கியது எமது நிறுவனமே. இதற்காக எமது நிலையத்தில் இரு சட்டத்தரணிகள், குறிப்பிட்ட நேரத்தில் ஆலோசனை வழங்கி வருகின்றார்கள்.


திருமதி சரோஜா சிவச்சந்திரன்

இதன்மூலம் குடும்ப மணப் பிரிவினை, பாலியல் துன்புறுத்தல்கள், சிறுவர் துஷ்பிரயோகம், வீட்டு வன்முறைகளைத் தடுத்தல், பதிவு செய்யப்படாத திருமணங்களைப் பதிவு செய்தல், பிறப்புச் சான்றிதழ் பெற முடியாதவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொடுத்தல் போன்ற சட்ட நடவடிக்கைகளை எமது நிலையம் முன்னெடுத்துச் செல்கின்றது. இவ் விரிவு படுத்தப்பட்ட சேவை மூலம் பல பெண்கள் நன்மைபெற்றுள்ளனர்.

### சஞ்சிகை

எமது அமைப்பின் வெளியீடாக 'நங்கை' சஞ்சிகை வெளிவருகின்றது. இதன் மூலம் பாடசாலை மாணவிகள், யுவதிகள் சம்பந்தமான பல ஆக்கங்கள் வெளிவருகின்றன. இந்தச் சஞ்சிகை மூலம் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம்.

நல்ல நூல் நிலையம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். யுனெஸ்கோவின் 'யுனால்' நூலக சேவைப் பிரிவின் ஒரு அங்கமாக அது இயங்கி வருகின்றது. பெண்ணியம் தொடர்பான ஆய்வுகள், பல்கலைக்கழக மாணவிகளுக்கும் மற்றும் ஆர்வமுள்ளவருக்கும் புத்தகம் இரவல் வழங்கல் போன்ற சேவைகளில் இந்நூல்நிலையம் ஈடுபட்டு வருகின்றது.

### விடுதி

1996ஆம் ஆண்டுக்குப் பின் யாழ்ப்பாணத்தில் பெண்கள் தங்குவதற்குப் பல சிரமங்கள் இருந்தன. அந்தக் காலகட்டத்தில் பெண்கள் தங்குவதற்கு பாதுகாப்பான விடுதி ஒன்று தேவையாக இருந்தது. அதைக் கருத்திற்கொண்டு ஒரு விடுதியை அமைத்துள்ளோம். இந்த விடுதியில் தூர இடங்களில் இருந்து வரும் பெண்கள், பல்கலைக்கழக மாணவிகள் எனப் பலர் தங்கி வருகின்றனர்.

மேலும் சேவைகளை தொடர்வதற்கு இலங்கையெங்கும் உள்ள பெண்கள் அமைப்புக்களோடும் சர்வதேச மட்டத்திலும் வலைப்பின்னல் தொடர்பை ஏற்படுத்தி இருக்கின்றோம்.

**நேர்காணல்:மணிசேகரன்**

# புனித யாகப்பர் ஆலயத்தில் நீதிக்கான நினைவாலயம்

**13-11-1993 இல் புனித யாகப்பர் ஆலயம் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சுத் தாக்கு தலையொட்டி நீதிக்கான நினைவாலயம் இன்று திறந்து வைக்கப்படுகிறது.**

9 வருடங்கள் கடந்த இன்றைய நாளை அரச பயங்கரவாதத்திற்கு மூச்சடங்கிபோன சோகநாளாகக் குருநகர் மக்கள் நினைவு கூர்வர். குருநகரின் ஆன்மீகச் சுரங்கமாக திகழ்நத புனித யாகப்பர் ஆலயத்தில் அரச பயங்கரவாதம் தனது போர் விமானத்தினால் பதம் பார்த்த கொடூர நாள். எண் 13ஐ மேற்புலத்தில் அமங்கல எண் என்பர். அங்கு மாடிக்கட்டடங்களில் 13 எண் கிடையாது. கிறிஸ்துநாதர் தனது 12 சீடர்களை அழைத்து பதின்மூவராகத் தொடங்கிய பணி காட்டிக்கொடுப்பில் முடிவுற்றதன காரணமே அதுவென்பர்.

இதன் வழியே குருநகரில் நடந்த அநீத நிகழ்வை - வாழ்பவர், எதிர்காலத் தலைமுறையினருக்கு காலங்காலமாக நினைவாக்க நீதிக்கான நினைவாலயம் ஒன்று எழுப்பபபட்டு அதன் திறப்புவிழா இன்றைய தினம் நடைபெறவுள்ளது. போர்ச்சூழலில் உடைந்துபோன கட்டடங்கள், அழிக்கப்பட்ட இயற்கை வளங்கள், இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட வீடுகள் அனைத்தும் போரின் நினைவுச் சின்னங்களே. மனிதத்தை தொலைத்தும், நெருக்கமானவர்களை இழந்தும் உள்ளச் சுமைகளோடும் உடல் வடுக்களோடும் ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் உயிருள்ள நடமாடும் நினைவுச் சின்னங்களாக வாழ்ந்தாலும், எதிர்காலத் தலைமுறையினருககு போரின் அகோரவிளைவுகளை விளம்பும் நினைவுச் சின்னங்கள் தேவை. சமாதான இடைவெளியில் அழிந்தவைகள் உருப்பெறுகின்றன. போர் இங்கு நடந்ததா என்று சந்தேகிக்குமளவிற்கு மாற்றங்கள் வெகு விரைவில்... குண்டுவீச்சு இவ் ஆலயததை குடைந்ததா என்று சந்தேகிக்கும் அளவிற்கு புனித யாகப்பர் ஆலயம் புதுப்பொலிவுடன். போர்ச்சூழலில் நினைவுச்சின்னங்கள், துயிலும் இல்லங்கள் - வீரம், தியாகத்தை வெளிப்படுத்தி புதிய வேங்கைகளை உருவாக்கி நிற்கும். சமாதானச் சூழலில் - எமக்கு முன்சென்றவர்கள் செய்த தியாகங்களே எமக்கு வாழ்வளித்தது என்ற மானிட விழுமியங்களை எடுத்துரைக்கும்.


13.11.93இல் ஆகாயக் குண்டுவீச்சினால் நீர்மூலமாக்கப்பட்ட குருநகர் புனித யாகப்பர் ஆலயம், 9 வருட நிறைவில் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது.

இந் நினைவுச் சின்னத்திற்கு நீதிக்கான நினைவாலயம் என்ற பெயர் மிகப் பொருத்தமானது. அநீதிகள், உரிமை மீறல்கள் பாரிய காயங்களை ஏற்படுத்தியதை, 'தாங்கொணாத் துயரங்களை அனுபவித்தவர்கள் குருநகர் மக்கள் என்பதை இந்த ஆலயம் எடுத்துரைக்கும். அரச பயங்கரவாதத்தின் பீரங்கிகளின் தீராப் பசிக்கும், ஓயாத ஷெல் தாக்குதலுக்கும், கடலிலும் கரையிலும் எதிர்பபின்றி மக்கள் இரையாகினர் என்பதை இந்த ஆலயம் சுட்டும். இதுபோன்ற அகோரமான நிகழ்வு, இங்கு நடந்தது போன்று, உலகில் எந்த மூலையிலும் நடக்கக்கூடாது என்பதை இந்த ஆலயம் உணர்த்திநிற்கும்.

இந்த ஆலய நினைவுக் கருங்கல்லில் - 'இறந்தவர்களுக்கு வணக்கம், வாழ்பவர்களுக்கு எச்சரிக்கை' என்று பொறிககப்பட்டுள்ளது. குண்டுவீச்சினால் மடிந்த, உருவம் சிதைந்த உடலங்கள் நிரம்பியிருந்த, உடைந்த ஆலயம் வாழ்பவர்க்கும் வருங்கால தலைமுறையினருக்கு ஒரு எச்சரிக்கை. எதிர்காலத் தலைமுறையினர் இவ்வாறான நிகழ்வை அனுமதிக்கக் கூடாது என்று இந்த ஆலயம் காலங்காலமாக உணர்த்தும். இது போன்ற நிகழ்வுகள் நடவாதிருக்க எதிர்காலத் தலைமுறையினர் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும என்று இது பறைசாற்றும். மக்கள் சக்திதான் - உரிமைக்குப் பாதுகாப்பு, மக்கள் சக்திதான் - நீதிக்கு அரண், மக்கள் சக்திதான் - உண்மையின் கோட்டை, அச்சக்தியை இழந்தால் மீண்டும் தாக்கப்படுவோம், எமது உடன்பிறப்புகளை இழப்போம் என்று இந்த ஆலயம் அறைகூவல் விடுக்கும் என்பதை இந்த நினைவாலயம் எப்பொழுதும் எச்சரிக்கும். உரிமைக்கான வேட்கை கொண்டு நீதிக்கான தாகிப்பில் ஒன்றாக அணிதிரளும் பொழுது நாம் வழமாட்டோம், இரையாகமாட்டோம் என்றும் இவ்வாலயம் வரலாற்றில் எச்சரிக்கும்!

**அ.பி.ஜெயசேகரம்,**
**பங்குக் குரு,**
**குருநகர்.**

## சின்னஞ்சிறு செய்திகள்

### தண்ணீர் கேட்டவர் சங்கிலியை அபகரித்தார்

தண்ணீர் கேட்டு வீட்டுக்குள் சென்ற நபர் ஒருவர் வயோதிப மாதுவின் கழுத்திலிருந்த சங்கிலியை அபகரித்துச் சென்ற சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இனுவில் கந்தசாமி கோயில் பகுதியில் இடம்பெற்ற இத்திருட்டுச் சம்பவத்தில் திருடப்பட்ட சங்கிலி 2 பவுண் நிறையுடையதெனத் தெரியவருகிறது.

### சைவசமயத் தீட்சை

(கரணவாய்)

யாழ்.சைவபரிபாலன சபையின் ஆதரவில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மு.ப.8 மணி தொடக்கம் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ சமயத்தீட்சை வழங்கப்படவுள்ளது.

கரணவாய் சிவஸ்ரீ-திருஞான சம்பந்தக் குருக்கள் தலைமையில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில் 7 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### நீதிமன்றத்திலிருந்து பிணைப்பணம் மீளப்பெறலாம்

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பிணை வைப்பாக பணத்தைச் செலுத்தி வழக்குகள் முடிந்த பிணையாளிகள், தங்களது பிணைப்பணத்தை நதிமன்ற அலுவலகத்தல் விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நீதியமைச்சின் செயலாளரிடமிருந்து 2002 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறாமையாலேயே, இந்தப் பிணைப்பணத்தை வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது. கணக்காண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்பு, விண்ணப்பம் செய்தால் காசோலை மூலம் பிணைப் பணம் வழங்கப்படும் என்று நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

முன்னைய காலங்களில் வழக்குகள் முடிவடைந்த பிணையாளிகள் விண்ணப்பித்தால் அவை நீதியமைசசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு மூன்று மாதங்களின் பின்னரே பிணைப்பணம் மீளளிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

### இந்திய-மேற்கிந்தியக் கிரிக்கெட்

# ரசிகர்களின் குழப்பத்தினால் இந்தியா வெற்றி என அறிவிப்பு



ராஜ்கோட்டில் நேற்று நடைபெற்ற மேற்கிந்திய அணிக்கு எதிரான மூன்றாவது சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் ரசிகர்களின் இடையூறுகளையடுத்து இந்தியா வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா 22.5 ஓவர்களில் 9 விக்கட்டுக்களை கைவசம் வைத்திருந்த நிலையில் 101 ஓட்டங்களை பெறவேண்டியிருந்தது. இந்திய ரசிகர்கள் இடையூறுகளை விளைவித்ததையடுத்து ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றதாக டக்வேர்த் லூயிஸ் சட்டவிதிக்களுக்கு அமைய அறிவிக்கப்பட்டது.

இத்தகைய சட்டவிதி ஆட்டத்தை மழை குழப்பும் சூழ்நிலையிலேயே வழமையாக அமுல் செய்யப்படும். உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித்தொடரிலும் இந்தியா இத்தகைய ஓர் சாதக நிலையை இலங்கைக்கு எதிராக பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய ஆட்டத்தில் ஆட்ட நடுவர் மைக் புரக்டர் இந்தியா 81 ஓட்டங்களால் இந்த டி.எல் சட்டவிதியின் கீழ் வெற்றிபெற்றதாக அறிவித்தார்.

மேற்கிந்திய களத்தடுப்பாளர் வஸ்பேர்ட் டிரேக் மீது ரசிகர் கும்பலொன்று போத்தலை வீசி எறிந்ததையடுத்தே குழப்ப நிலை எழுந்தது. பொலிசார் அக்கும்பலை மைதானத்தை விட்டு விரட்டியடித்தனர்.

நேற்றைய ஆட்டத்தின் ஸ்கோர் விபரம்:-

மேற்கிந்தியத் தீவுகள் - 50 ஓவர்களில் 5விக்கட் இழப்பிற்கு 300 ஓட்டங்கள்.



வெற்றிக்களிப்பில் இந்திய அணி

இந்தியா- 27.1 ஓவர்களில் ஒரு விக்கட் இழப்பிற்கு 200 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் டி.எல் முறையில் 81 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மேற்கிந்திய அணியின் சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கைஸ் 72 ஓட்டங்களையும், சர்வான் 84 ஓட்டங்களையும், சந்தர்போல் 74 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணியின் ஷேவாக்-கங்குலி ஜோடி முதல் விக்கட்டுக்கு 196 ஓட்டங்களை 27 ஓவர்களில் குவித்தது. ஷேவாக் 82 பந்துகளில் 114 ஓட்டங்களைப் பெற்றார்.

# விளையாட்டு

## மைலோ கிண்ண இறுதிப் போட்டி

கோப்பாய் லயன்ஸ் கழகம் நடத்தும் மைலோ கிண்ண உதை பந்தாட்ட இறுதிப் போட்டி இன்று மாலை 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிப்போட்டியில் பங்குபற்றும் யா/மத்திய கல்லூரி அணியினரையும், யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினரையும் படங்களில் காணலாம்.



யா/மத்திய கல்லூரி அணி



யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி

YAMAHA இதோ! யாழ்.நகருக்கு வந்துவிட்டது!!

3 free services 2 Year WARRANTY up to 30000 Kms

உங்கள் நெஞ்சைத் தொடும் யமகா மோட்டார் சைக்கிள்களும் வெளி இணைப்பு இயந்திரங்களும்





வை.பி.எக்ஸ் 125




கிறக்ஸ்




ஆர்.எக்ஸ் 100






கிறக்ஸ் ஆர்

மோட்டார் சைக்கிள் சேவிஸ் வசதிகள் காலை 8 மணி - மாலை 5.30 மணிவரை

உங்கள் பயணங்கள் தரையிலும், கடலிலும் யமகாவில் தொடரட்டும்

ஏமாற்றத்தைத் தவிர்க்க முன்கூட்டியே பதிவுசெய்யவும்







இரத்தினம்ஸ்

30, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்

கடலில் மீனவ நண்பர்களின் வழித்துணை

SOLE AGENT FOR ASSOCIATED MOTORWAYS LTD. IN JAFFNA

(சி-178)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD

- கணினியில் முன்னனுபவம் இல்லாதவர்களிற்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், games, மற்றும் விசேட வகுப்புக்கள்.

கணினி உலகில் முன்னணியில் திகழ இன்றே நாடுங்கள்!!

CES

விண்ணப்ப முடிவுத் திகதி:
15.12.2002

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223,Kasthuriyar Road,
Jaffna.
(Opposide of J/Hindu Primary School)

# கிளிநொச்சி, மன்னாரில் பெரும் கண்டனப் பேரணி

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு மேல் நீதிமன்றம் விதித்துள்ள 200 வருட கடுங்காவல் சிறைத்தண்டனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் கண்டனப் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கந்தசாமி கோவிலில் இருந்து ஆரம்பித்த பேரணி அரச அதிபரின் செயலகத்தைச் சென்றடைந்ததும் அங்கே கண்டனக் கூட்டம் இடம்பெற்றது. பேரணிக்கு ஏற்பாடுகளைச் செய்திருந்த கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின், தலைவர் பொன். விநாயகமூர்த்தி தலைமையில் இடம் பெற்றது.

கூட்டத்தைத் தொடர்ந்து நீதிமன்றத்தீர்ப்புக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு முகவரியிடப்பட்ட மகஜர் கிளிநொச்சி அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இதன் பிரதிகள் பிரதமர், அமெரிக்க ஜனாதிபதி, நோர்வே பிரதமர், பிரித்தானியப் பிரதமர், நோர்வேத் தூதுவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

இதேவேளை, மன்னார் நகரிலும் நேற்றுக்காலை நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்துப் பேரணி நடத்தப்பட்டுள்ளது. ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் பங்கேற்க, இப்பேரணி 10.45 மணியளவில் ஆரம்பமானது. மன்னார் விளையாட்டரங்கில் ஆரம்பித்த பேரணி மன்னார் கச்சேரியில் முடிவுற்றது.

அங்கு சட்டமா அதிபருக்கான மகஜர் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. இப்பேரணியிலும் கண்டனக் கூட்டத்திலும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

கண்டனக் கூட்டத்தில் உரையாற்றிய மன்னார் ஆயர்,

மக்கள் இப்போது சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கியுள்ள நிலையில் இந்தத் தீர்ப்பு மக்கள் மத்தியில் ஏக்கத்தையும், ஏமாற்றத்தையும் அளித்திருக்கின்றது. மக்கள் தாம் சுதந்திரமாக வாழவே விரும்புகின்றனர். இதற்காகவே இப்போது பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

இந்தப் பேச்சுக்களில் இது போன்ற தீர்ப்புக்கள் தடங்கல்களை ஏற்படுத்தும் என்பதால் இத்தகைய சட்டங்களை சட்டக்கோவையில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

# இரண்டாயிரம் முறைப்பாடுகள் யாழ். அரசியற்துறையில் பதிவு

**- யாழ்.அரசியற்துறைப் பொறுப்பாளர் -**

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண அரசியறதுறைச் செயலகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 15ம் திகதி திறந்ததிலிருந்து நேற்று வரை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

இவற்றில் காணிகள், நிலங்கள் சம்பந்தமாக 420 முறைப்பாடுகளும், வீடு, குடியிருப்பு, இருப்பிடம் சம்பந்தமாக 310 முறைப்பாடுகளும், வர்த்தக நிலையம் சம்பந்தமாக 195 முறைப்பாடுகளும், காதல், சீதனப் பிரச்சினை, திருமணம், விவாகரத்து சம்பந்தமாக 362 முறைப்பாடுகளும், களவுகள் சம்பந்தமாக 174 முறைப்பாடுகளும், கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக 223 முறைப்பாடுகளும், அச்சுறுத்தல், அவமானப்படுத்தல்சம்பந்தமாக 237 முறைப்பாடுகளும் இவை தவிர்ந்த ஏனைய 120 முறைப்பாடுகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.அரசியற்துறைச் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மொத்தமாக 2 ஆயிரத்து 41 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் பொலிஸாரால் நடைபெறுகின்றபோதிலும் இவ்வளவு முறைப்பாடுகள் எமது செயலகத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதானது மக்கள் யாழ்ப்பாண சிவில் நிர்வாகத்தில் நம்பிக்கை அற்றிருப்பதையே வெளிக்காட்டுகின்றது எனவும்,

மக்களின் இயல்பு வாழ்க்கைக்காக நாம் அனைவரும் உழைத்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் சிலர் மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குலைக்கத் திட்டமிட்டு பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். இவ்வாறானவர்களின் இச்சமூக விரோதச் செயல்கள் தொடரும் பட்சத்தில் அவர்கள் இனம் காணப்பட்டு எம்மால் சீர்திருத்தப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், நாம் போட்டிக்காக அரசியலை நடத்தவில்லை. நாம் போட்டி அரசியலமைப்பும் இல்லை. நாம் ஓர் விடுதலை அமைப்பு எமது நோக்கம் மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாடும் மக்களின் இயல்பு வாழ்க்கை மேம்படுத்தலுமே. இதற்காகவே நாம் பல தியாகங்களைச் செய்துள்ளோம் என்றார்.

(லி)

## கப்பலில் தீ!

கொழும்பிலிருந்து 186 கடல் மைல் தொலைவில் - சர்வதேசக் கடற்பரப்பில் கொரிய நாட்டு சரக்குக் கப்பல் ஒன்று தீப்பிடித்து எரிந்த சம்பவத்தில் மாலுமி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் மாலை 3.40 மணியளவில் கப்பலில் ஏற்பட்ட வெடிப்பினால் தீபரவி கப்பல் முழுவதும் எரிந்து விட்டதா தெரியவருகின்றது.

## தலைவர்.....

அவர் தனது உரையில் - விடுதலைப் புலிகளின் தலைவருக்கு நீதிமன்றம் 200 வருடச் சிறைத் தண்டனை விதித்த நிலையில், அவர் தலைமை தாங்கும் இயக்கத்துடன் பேச்சுக்களை நடாத்துவது சட்டவிரோதமானதென்றும், நாட்டைப் பிரிக்க முயற்சிப்பவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவது நாட்டுக்குச் செய்யும் துரோகம் என்றும் பேசினார்.

பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர்- அப்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி - விமல் வீரவன்சவின் அறிக் கைக்கு சபாநாயகர் அனுமதிதருவதற்கு முன், சம்பந்தப்பட்ட அறிக்கையின் பிரதிகள் - அமைச்சர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தான் இது பற்றிப் பிதமருக்கும், பாதுகாப்பு அமைச்சருக்கும் அறிவித்ததாகக் கூறினார்.

ஆனால் - உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவும், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் அவ்விதம் தமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை எனக் கூறினர்.

இக்கட்டத்தில், குறுக்கிட்ட அமைச்சர் மகேஸ்வரன் -

இனவாதம் கக்கும் பேச்சுக்களை சபையில் பேசவேண்டாம் என்றும், தமிழ் மக்களின் நலனுக்காகப் போராடும் அமைப்பொன்றின் தலைவராக மட்டுமல்லாது, தமிழினத்துக்கான தலைவராக மக்கள் - பிரபாகரனைப் பார்க்குமிடத்து, அவரைப்பற்றி அவதூறான பேச்சுக்கள் வேண்டாமென்றும், இத்தகைய பேச்சுக்கள் - அமைதிச் சூழலில் வாழும். மக்களின் நிம்மதியைக் குலைத்துவிடக்கூடியதாக அமைந்துவிடுமென்றும் கூறினார்.

இதனால் ஏற்பட்ட வாதப்பிரதிவாதங்களால் சபையை 10 நிமிடங்களுக்கு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா ஒத்திவைத்தார்.

எனினும் மீண்டும் சபை கூடியதும், விமல் வீரவன்ச தனது பேச்சைத் தொடர்ந்தபோது, மீண்டும் - வாதப்பிரதிவாதங்கள் சூடுபிடித்தன.

அதனால் சபாநாயகர் அமைச்சர் மகேஸ்வரனை சபையை விட்டு வெளியேறுமாறு பணித்தபோது - அவருக்கு ஆதரவாக ஆளும் கட்சி எம்.பிக்களும், கூட்டமைப்பின் அ.விநாயகமூர்த்தி, ரவிராஜ் ஆகியோரும் குரல் கொடுத்தனர்.

ஆனால் - அமைச்சர் மகேஸ்வரன் சபையை விட்டு வெளியேறாததால், சபை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. சபாநாயகருடனும் அமைச்சர் மகேஸ்வரன் வாக்குவாதப்பட்டார்.

இதனையடுத்து - சபாநாயகர் மீண்டும் சபையை ஒத்திவைத்துவிட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இது பற்றி அறிவித்ததுடன் - சபாநாயகர் அறையில் அமைச்சர்கள் மகேஸ்வரன், கரு ஜெயசூரியா, லொக்கு பண்டார, மஹிந்த சமரசிங்க, பாராளுமன்றச் செயலாளர் பிரியாணி விஜேசேகர ஆகியோரை அழைத்துப் பேசினார்.

இதையடுத்து - அமைச்சர் மகேஸ்வரன் சபைக்கு சமுகமளிப்பதிலிருந்து வெளியேறுவதாக இணக்கம் தெரிவித்ததைத் தொடர்ந்து, மீண்டும் சபை கூடியது.

சபை கூடியதும் - விமல் வீரவன்ச தொடர்ந்து உரையாற்றித் தனது உரையை முடித்துக் கொண்டார்.

## அரசு-புலிகள்...

தேர்தல் முறை அமுல்படுத்தப்படல் வேண்டும்.

1989ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியல் அமைப்பு சட்டத்தில் நாடாளுமன்றத்தில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை பெறமுடியாமல் இருந்தது. 1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 80 சதவீதமான வாக்குகளைப் பெற்ற எமக்கு நாடாளுமன்றத்தில் மேலதிகமாக ஒரு ஆசனமே கிடைததது. இது விந்தையான விகிதாசாரத் தேர்தல் முறையாகும் என்றார்.

ஜனாதிபதி பதவி ஏற்று எட்டு ஆண்டுகள் பூர்த்தி நிகழ்வில் கூட்டணி எம்.பி. இரா. சம்பந்தன் மற்றும் டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதிக்கு விளக்கவே சம்பந்தன் இவ் வைபவத்தில் கலந்து கொண்டதாக மற்றுமோர் கூட்டணி எம்.பியான துரைரட்ணசிங்கம் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.

## கடற்படை....

அட்மிரல் வீரசேகர தலைமை வகிக்கிறார். கடற்புலிகள் தரப்பில் தளபதி சூசை தலைமை தாங்குகிறார்.

ஏற்கனவே இணக்கம் காணப்பட்ட மீன்பிடி சம்பந்தமான நடவடிக்கைகளை எவ்வாறு திருப்திகரமாக கையாள்வது என்பது பற்றி இன்று ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வீரவன்ஸ...

முடிவை எதிர்நோக்குகின்ற விடயம் பற்றி பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்ப முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே - விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீதான தீர்ப்பின்படி விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடாத்துவது சட்டவிரோதம் என ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ச கவனஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவதை சபாநாயகர் அனுமதித்திருக்கக் கூடாது எனத் தெரிவித்தார்.

## புலிகளில்....

சிறுவர்களை ஒப்படைக்கும் நிகழ்வில் இச்சிறுவர்களின் பெற்றோர்களும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட பொறுப்பதிகாரி பிய சென்டரா, யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி அக்ரன் டேக்சாச் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கின்ற வேலுப்பிள்ளை சுபாஸ்கரன், கதிரவேலு சுரந்தன், முருகையன் நிறைஞ்சன், புவனேஸ்வரன் சுகந்தன், பிரகதீஸ்வரன் ஆகிய சிறுவர்களே கடந்த சனிக்கிழமை தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். அரசியற்துறைத் தலைமையகத்தில் இணைந்திருந்தனர், இவர்கள் பதினெட்டு வயதிற் குட்பட்டவர்கள் என்ற காரணத்தால் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். (லி)

# வன்னி மாவீரர் துயிலுமில்லங்கள் செல்ல போக்குவரத்து ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

வன்னி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இடங்களிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் விதையுண்ட மாவீரர்களின் பெற்றோர்கள் யாழ்ப்பாணத்தில் தற்போது குடியிருந்தால் அவர்கள் மேற்படி மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு சென்று வர தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினரால் போக்குவரத்து ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

எனவே மேற்படி பிரதேசங்களிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் விதையுண்ட மாவீரர்களின் பெற்றோர்கள் தத்தமது கோட்ட அரசியற்துறைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு தமக்குரிய போக்குவரத்துக்களை மேற்கொள்ளுமாறு யாழ். அரசியற்துறைச் செயலகம் கேட்டுள்ளது. (லி)

# ஈ.பி.டி.பி. உறுப்பினரின் சடலம் கொழும்பில் ஒப்படைக்கப்படும்

அனலைதீவில் கடந்த சனிக்கிழமை மர்மமான முறையில் இறந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினரின் சடலம் கொழும்பிலுள்ள அவரது தாயிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

உயிரிழந்த யோகராசா மைக்கல் என்பவரின் பிரேத பரிசோதனையின் போது, இவர் கிருமி நாசினி மருந்தை அருந்தியதால் அல்லது பருகியதன் மூலமே இறந துள்ளாரெனத் தெரியவந்துள்ளது. இவரது சடலத்தில் எந்த விதமான அடிகாயங்களும் காணப் படவில்லை. இவரது வீட்டு அலுமாரியில மேற்படி கிருமி நாசினி மருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. இவரது உடலில் நஞ்சு பரவியதன் மூலமே இறந்துள்ளார் என பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இச்சடலம் யாழ்ப்பாணத்திலுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு கொழும்பிலுள்ள இக்கட்சித் தலைமையகத்தில் வைத்து இறந்தவரின் தாயான திருமதி. யோகராசாவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இவரது சடலத்தை புதைக்கும்படியும் தொடர்ந்து விசாரணைகளை நடாத்தும்படியும் ஊர்காவற்துறை நீதவான் திருமதி. சறோஜினிதேவி இளங்கோவன் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் இவரது காதலியான பெண் கொடுத்த முறைப்பாடுகளில் முரண்பாடுகள் இருப்பதாகவும் இவரது மரணம் தொடர்பாக உறுதியான தகவல்கள் கிடைக்காமையினாலும் இம மரணம் தொடர்பான வழக்கு விசாரணைகள் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் தொடர்ந்து நடைபெறவுள்ளன (லி)

# பிரிட்டிஷ் எம்.பிக்கள் குழு இன்று யாழ்.வருகை

பிரிட்டிஷ் நாடாளுமன்ற சர்வ கட்சி செயலாளர் நாயகம் தலைமையிலான நல்லெண்ணக்குழு இன்று யாழ்ப்பாணம் வருகிறது.

வடபகுதி மக்களின் கருத்துக்களை நேரில் கேட்டறிந்து யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கட்டியெழுப்புவது பற்றி இவர்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

அரசாங்க அதிபர் பத்மநாதன், மதத்தலைவர்கள், அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் இவர்கள் சந்தித்துப் பேசுவார்கள்.

## கவன ஈர்ப்பு...

வாதப்பிரதிவாதத்தில் ஈடுபட்ட அமைச்சர் மகேஸ்வரன் சபைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டால் - சபையிலிருந்து வெளிநடப்புச் செய்யத் தயாராவிருந்த ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன், கட்சி வேறுபாட்டைக் கடந்து கூட்டமைப்பு உறுப்பி னர்களும் வெளிநடப்புச் செய்யத் தயாராகவிருந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

We need a dynamic
COMPUTER HARDWARE TECHNICIAN
Walk in interview
Interview will be held at 3.00 pm Friday 15th November 2002
at our office present with complete CV.
Salary negotiable
The Director,
STP Computer World (Pvt.) Limited
54A, Palaly Road, Kantharmadam, Jaffna T.P:021-2222674, e.mail: stpedu@slt.lk

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.11.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.